

# தொண்டன்

ஆரம்பம் - பெப்ரவரி 1969

மார்ச் - ஏப்பிரல் - 2002 12/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

மார்ச் - ஏப்ரல் - 2002

மலர் 34 ❄ இதழ் 02

ஆசிரியர்
J.A.G. இரட்ணகுமார்

இணை ஆசிரியர்
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்
மெற்றில்டா இராஜேந்திரம்

வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு/மட். மறை மாவட்டம்

முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்.
அ. பெ. எண் ~ 44
மட்டக்களப்பு.

**SOCIAL COMMUNICATIONS CENTRE**
P. O. BOX - 44
BATTICALOA. 30000
Tel: 065 - 22723

விலை - 12/=
ஆண்டுச்சந்தா : 160/=
(தபாற்செலவு உட்பட)


## உள்ளே


| | |
|---|---|
| அன்புடன் உங்களோடு | 1 |
| ஆயரின் வாழ்த்துச் செய்தி | 2 |
| சிலுவைப்பாடும் உயிர்ப்பு..... | 3 |
| உயிர்த்த யேசுதரும் அமைதி | 5 |
| வல்லமை கீதங்கள் | 7 |
| உயிர் பெறுவோம் | 8 |
| இலக்கிய மணி க.தா.செலின் | 9 |
| சிறுகதை | 10 |
| இலக்கிய மஞ்சரி | 12 |
| இரவில் உதித்த யேசு | 13 |
| தமிழ்க் கிறிஸ்தவ சமூகத்தில் | 15 |
| மாணவர் பக்கம் | 17 |
| நிவாரணம் | 21 |
| இளைஞனே ஒருகணம் | 22 |
| விவிலியம் கற்போம் | 23 |
| அறிவை வளர்ப்போம் | 24 |




**தொண்டன் வாசகர்கள் எழுத்தாளர்கள், விற்பனையாளர்கள் அனைவருக்கும் யேசுவின் உயிர்ப்பு விழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.** – ஆசிரியர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு

காலம் கடந்த கடவுளுக்கு
காலத்திற்குட்பட்ட மனிதன்
கல்லறை கட்டினால் - விளைவு
கல்லறைக் கல் புரள
காவலுக்கு நின்ற காவலர்கள்
கால்கள் தடுமாறி விழ
இயேசு உயிர்த்தார்
மாட்சியோடு காட்சி தந்தார்.

இயேசுவின் உயிர்ப்பு விழாக் கொண்டாட்டத்தின்
உச்சத்தில் நீ
உலாவரும் இந்த நாட்களில் நீ-
உயிர்க்க வேண்டும் என்றால்
முதலில் நீ இறக்க வேண்டும்
இது இறைவனின், இயற்கையின் நியதி
இறப்பில்லாமல் உயிர்ப்பில்லை.

இறப்பு - இது
இதயத்தின் துடிப்பு நின்று போதல்
என்ற எண்ணம் மாறி
மூளையின் செயலிழப்பு என்று
விஞ்ஞானம் தெரிவிக்கிறது
இதுவே இவ்வுலக வாழ்வின் முடிவாகவும்
மனிதனுக்கு அமைந்து விடுகிறது.

இந்த இறப்பு - மனிதனை (உன்னை)
இறைவனிடம் அழைத்துச் செல்ல வேண்டுமென்றால்
நீ ஒரு கொலைக்காரனாக மாற வேண்டும்
என்ன அதிர்ச்சியாக இருக்கிறதா....?
ஆம், அதுதான் உண்மை
உன்னகத்திலே நீ வைத்து
வணங்கி வரும்
சில மாற்றுத் தெய்வங்களை - நீ கொன்று
அவைகளுக்குக் கல்லறை கட்ட வேண்டும்

உன்னகத்திலே உள்ள
மாற்றுத் தெய்வங்கள் எவை
என்பதை உணர்ந்து கொண்டாயா....?
சில வற்றை உனக்குச் சொல்லட்டுமா...?
"நான்" தான் எல்லாம் என்ற மமதை,
பணவெறி, பதவியாசை, மண்ணாசை........
இப்படி அடுக்கிக்கொண்டு போகலாம்.

இவற்றிற்கெல்லாம் - கல்லறை
கட்டியிருந்தால் மட்டுமே,
இயேசுவோடு நீ உயிர்த்தெழ முடியும்
இவற்றுக்கெல்லாம்
கல்லறை கட்டத்தானே
உனக்கு நாற்பது நாட்கள்
விசேட முறையில் தரப்பட்டன.
என்ன செய்தாய் நீ......

இந் நிகழ்வுகள்
உனது வாழ்க்கையில்
இடம் பெறவில்லையென்றால்
உனது உயிர்ப்பு விழாக் கொண்டாட்டம்
அர்த்தமற்ற போலிக் கொண்டாட்டம்
"உன்னையே நீ எண்ணிப்பார்" - என்ற
தத்துவ வார்த்தைகளுக்கமைய
உனது ஆன்மீக வாழ்க்கை பற்றி
எண்ணிப் பார்க்கலாமே......

**"*Easter* நல் வாழ்த்துக்கள்"**

ஆசிரியர்




**இறைவாக்கு**



ஆண்டவர் உண்மையாகவே
உயிருடன் எழுப்பப்பட்டார்

- லூக்கா 24/34



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை -மட்டக்களப்பு மறைமாவட்ட

# ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின்

## உயிர்ப்பு விழா வானொலிச் செய்தியிலிருந்து ......



இயேசுவின் உயிர்ப்பு மானுடத்தின் புதிய விடியல்; வாழ்வின் புதிய நம்பிக்கை. மானிட வாழ்வின் முடிவு சாவு என்ற நியதியை மாற்றி, சாவுக்குப்பின் வாழ்வு என்னும் புதிய சித்திரத்தை வரைந்தது இயேசுவின் உயிர்ப்பு. அவ்வாழ்வு கடவுளோடு மனிதன் ஒப்புரவாகின்ற புதிய வாழ்வாகும். ஏனெனில் குற்றத்தால் கடவுளோடு இருந்த அருள் உறவை முறித்துக்கொண்ட மானுடத்தின் தலை மகனாக, பாடுகள் பட்டு, இறந்து, உயிர்த்துப் பரிகாரம் தேடிய இயேசுவின் வழியாக முழுமனித குலமும் நித்திய வாழ்வின் பங்காளியாகிறது. புனித பவுலடிகள் உரோமருக்கு எழுதிய திருமுகத்தில் கூறுவதுபோல் "நம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் வழியாய்க் கடவுளோடு நல்லுறவு கொண்டுள்ளோம். நாம் இப்போது அருள் நிலையைப் பெற்றிருக்கிறோம். அந்த அருள்தான் நம்மைக் கடவுளுக்கு ஏற்புடையவர்களாக்கி நிலைவாழ்வுபெற வழிவகுக்கிறது." அந்த நிலை வாழ்வைப் பெற இவ்வுலகிலேயே உயிர்ப்பு அனுபவத்தை நாம் பெற வேண்டும். கிறீஸ்து, பாடுகள் மரணம் ஆகியவற்றைக் கடந்து உயிர்ப்புக்குள் நுழைந்ததுபோல் இவ்வுலக வாழ்வின் பிரச்சினைகள், நெருக்குவாரங்கள் அனைத்தையும் நம்பிக்கையோடு எதிர்கொண்டு கிறீஸ்துவுக்குச் சாட்சிகளாய் வாழும்போது உயிர்ப்பு அனுபவத்தில் நாம் வளரலாம். நிறை வாழ்வுக்கான பாதையில் நாம் நடைபோடலாம்.

உயிர்த்த இயேசு இவ்வுலகுக்கு விட்டுச் சென்றது சமாதானம், அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன், (புனித யோவான் 14/27.) அந்த அமைதி போரினால் வருமா? அல்லது போரற்ற நிலைதான் அமைதியா? ஒப்பந்தங்களினால் அமைதி வருமா? அல்லது சட்டங்களினால் அமைதி வருமா? இயேசு தரும் அமைதி இவை எல்லாவற்றையும் கடந்தது, அனைத்தையும் விட மேலானது ! அது நீதியின் வழியே பிறப்பது, குற்றமற்ற நெஞ்சில் குடியிருப்பது, இவ்வுலக வாழ்விலே அரும்பி நித்திய வாழ்விலே நிறைவது. நமது நாட்டிலும் அந்த அமைதி அரும்பி உள்ளது. நமது மக்கள், அமைதிக்காக ஏங்கி, செபித்து, தவம் புரிந்து, தியாகங்கள் பல செய்து மன்றாடியது வீண்போகவில்லை. அதேவேளை அமைதிக்கான பாதை கடினமானது என்பதையும் நாம் கருத்திலேகொள்ள வேண்டும். ஆனாலும் நாம் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் இழந்துவிடக் கூடாது. சமாதான முயற்சிகளுக்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஆயுதக் கலாசாரத்தை அடியோடு அகற்றி சமாதானக் கலாசாரமொன்றை நாம் வளர்க்க வேண்டும். பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதோடு நமது மனப்பாங்குகளையும் அபிவிருத்தி செய்யவேண்டும். ஒருவரை ஒருவர் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது நன்றன்று. அது அமைதிக்கான முயற்சிகள் முளையிலேயே கருகிவிடக் காரணமாகலாம். நீண்ட காலத்துக்குப்பின் நம் கைக்குக் கிடைத்துள்ள ஓர் அருமையான வாய்ப்பை நிதானமாகவும் புத்திசாதுரியத்துடனும் கையாண்டு ஒரு புதிய உறவை, புதிய வாழ்வை நாம் கட்டி எழுப்ப வேண்டும். திருத்தந்தை கூறுவதுபோல் ஒப்புரவு இல்லாமல் நீதி இல்லை, நீதி இல்லாமல் அமைதி இல்லை. எனவே பகையை மறப்பதும், ஒருவரை ஒருவர் மன்னிப்பதும், ஒருவரைஒருவர் கௌரவப்படுத்துவதும், சமத்துவ, சகோதரத்துவ மனப்பான்மையோடு ஏற்றுக்கொள்வதும் சமாதானம் நிலைபெற அவசிய மானதாகும். உயிர்ப்பின் வழியாக நிலை வாழ்வளித்த நம தாண்டவர் இயேசுக்கிறிஸ்து இந்நாட்டு மக்கள் நிரந்தர சமாதானத்தினூடாகப் புது வாழ்வு காண அருள் புரி வாராக!

அனைவருக்கும் உயிர்த்த இயேசுவின் ஆசீரும் வாழ்த்துக்களும்

**இவ்வாறு ஆயர் அவர்கள் தமது உயிர்ப்புவிழா வானொலிச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுவைப்பாடும் உயிர்ப்பு ஞாயிறும்

பெனி யே. ச

இதயம்
அன்பின் அடையாளம்

சிலுவை
துன்பத்தின் அடையாளம்

வார்த்தை மனுவுருவாகியது
துன்பம் சிலுவையாகியது

சிலுவையின் கொடுமை
நூற்றாண்டுகளுக்கு முற்பட்டதல்ல
இன்றும் கூடத்தான்

இதோ
இன்றைய
சிலுவையின் வடிவங்கள்


உலகத்தை
குக்கிராமமாக்கும் அவசரத்தில்
திறந்த பொருளாதார
கத்தரிக் கோலினால்
மூன்றாம் உலக நாடுகளின்
சிறகுகளை முறிக்கும்
மேலைத் தேசங்கள்

**மக்கள் சிலுவைச் சுமக்கிறார்கள்**

சமாதானத்திற்காக
கை குலுக்கிக் கொண்டே
சமருக்கு ஆயுதம் விற்கும்
வல்லரசுகளின் வாணிபங்கள்

**மக்கள் சிலுவைச் சுமக்கிறார்கள்**

சுதந்திர நாட்டின் அடிமைகளாய்
அகதிகள் அலைகையில்
மட்டைப் பந்தாட்டத்தில்
யதார்த்தத்தை மறக்கடிக்கும்
மேல்தட்டுக் கலாசாரங்கள்




**மக்கள் சிலுவைச் சுமக்கிறார்கள்**

வினாடிக்கு
நாற்பதுபேர் தற்கொலை
நாற்பத்தி மூவாயிரம் குழந்தைகள்
பட்டினியால் மரணிப்பு

**மக்கள் சிலுவைச் சுமக்கிறார்கள்**

நம்பிப் போட்டார்கள்
தேர்தலில் ஒட்டு
நாடாளுமன்றத்தில் போட்டார்கள்
தடைச்சட்டத்திற்கு வாக்கு

**மக்கள் சிலுவைச் சுமக்கிறார்கள்**

மக்களாட்சித் தலைவர்கள்
நீச்சல் குளங்களிலும்
'ஏசி' அறைகளிலும்
நாட்டின் முதுகெலும்புகளோ
'பிரிட்டிஸ்' காலத்து
நினைவுச் சின்னங்களான
மலையகத்து லயங்களில்

**மக்கள் சிலுவைச் சுமக்கிறார்கள்**

தேர்தல் காலங்களில்
தெருவெல்லாம் தோரணங்கள்
வாய்த் திறந்தால் சத்தியங்கள்
தேர்தல் முடிந்தாலோ
நீ யாரோ... நான் யாரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் சிலுவைச் சுமக்கிறார்கள்**

காசுக் காரனுக்கு
'கான்வென்ட்' கல்வி
கந்தனுக்கும் காமாட்சிக்கும்
'பிள்ளைக் காம்புறா' அரிச்சுவடி

**மக்கள் சிலுவைச் சுமக்கிறார்கள்**

சிலருக்கு
தடி மலுக்கும் இருமலுக்கும்
நவலோக மருத்துவம்
பலருக்கு
புற்று நோய் வந்திடினும்
டிஸ்பிரினும் பெனடோலும்

**மக்கள் சிலுவைச் சுமக்கிறார்கள்**

களத்தில்
படையினரும் போராளிகளும்
பலியாக
'களநிலவரம்' என
முரளியையும் ஜெயசூரியாவையும்
முன் மொழிந்த ஊடகங்கள்

**மக்கள் சிலுவைச் சுமக்கிறார்கள்**

இடுப்பை வெட்டுவதும்
மார்பைக் குலுக்குவதும்
இதுதான் கலையென
சொல்லும் சினிமாக்கள்

**மக்கள் சிலுவைச் சுமக்கிறார்கள்**

அதர்மம் தலைத் தூக்கி
ஆட்சி பீடத்தில் அமர்கிறது
உண்மைகள் மிதிபட
பொய்கள் சிம்மாசனம் ஏறுகின்றன
பேய்களுக்கு ஆதரவாய்
பிரசாரங்கள் !
பரிசுத்தத்திற்கு எதிராய்
போர்க் கொடிகள் !

**மக்கள் சிலுவைச் சுமக்கிறார்கள்**

எனினும்
சிலுவைப் பயணம்
சிலுவையோடு முடிந்ததாய்
சரித்திரம் இல்லை
சிலுவை
துன்பத்தின் குறியீடு
வெற்றிக்கும் அறைகூவல்

சாவையும் வென்றதாய்
சரித்திரம் உண்டே

சிலுவையை
பழுவாகப் பாராமல்
வலுவோடு எதிர்கொள்வோம்

மிக அண்மையில் _ ஒரு
'உயிர்ப்பு ஞாயிறு'
தெரிகிறது

## பைபிள் எழுதிய தாள்

***பண்டைத் தமிழர்கள் பனை ஓலையில் எழுதியது போன்று எகிப்தியர்கள் "ப்பைரஸ" என்ற நாணல் புல்லில் தயாரிக்கப்பட்ட தாள்களை எழுதப் பயன்படுத்தினார்கள். இந்த ப்பைரஸ தாளில் தான் முதன் முதலில் நற்செய்தி எழுதப்பட்டது. அதன் நகல்கள் இன்றும் இருக்கின்றன.***

**(கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு - சபாபதி குலேந்திரன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த இயேசு தரும் அமைதி

நாம் அனைவரும் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு விழாவினைக் கொண்டாடுகின்றோம். இவ்வருட உயிர்ப்புத் திருநாள் நம் எல்லோருக்கும் மெய்யாகவே ஓர் உயிர்ப்பாக, ஒரு விடுதலையாக, நிலையான அமைதியை அளிப்பதாக விளங்கவேண்டுமென நாம் அனைவரும் ஜெபிப்போமாக.

இந்நாட்களிலே நமது நாட்டின் நிலையைச் சற்று உற்று நோக்கினால் உயிர்ப்பின் அடையாளங்கள் தோன்றுவதைக்காண முடிகின்றது. யுத்தச் சூழலில் வாழ்ந்த நமக்குத் தீர்வின் கதவுகள் திறந்து விடப்படுவதைக் காண முடிகின்றது. யுத்த நிறுத்தம் கடந்த சில மாதங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டு ஓர் அமைதியான, அச்சமில்லாத சூழல் தோன்றுவதைக்காண்கின்றோம். அச்சமின்றி எங்கும் போய்வர முடிகின்றது. இரவிலும் பயமின்றிப் பிரயாணங்களை மேற்கொள்ள முடிகின்றது. அடைபட்டுக் கிடந்த பாதைகள் திறந்து விடப்படுகின்றன. தேடுதல் வேட்டைகளும் சுற்றி வளைப்புகளும் இல்லாது போயுள்ளன. நிம்மதியாகத் தூங்கவும் நிம்மதியாக இறக்கவும் ஏற்ற ஒரு நிலையைக் நாம் காண்கின்றோம். அரசும் போராளிகளும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பதற்குத் தம்மைத் தயார் செய்துகொண்டு வருகின்றனர். இவையெல்லாம் நாம் இது வரை காலமும் மன்றாடிக்கேட்ட செபத்தின் விளைவாக இறைவன் நமக்குக் கொடுத்துள்ள விடுதலையும் புதுவாழ்வும் என்றே கூறவேண்டும். இது உயிர்ப்பின் பிரதிபலிப்பென்றால் மிகையாகாது என்றே எனக்குத் தோன்றுகின்றது.



இது இயேசு அளிக்கவிருக்கும் நிலையான அமைதியின் ஆரம்பமேயாகும். முடிவல்ல. சமாதானத்தை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன், என் சமாதானத்தையே உங்களுக்கு அளிக்கின்றேன் என அன்று நமக்குக் கூறினார் ஆண்டவர் இயேசு. இன்று அவ்வார்த்தையின் பலனை ஓரளவுக்கு அனுபவிக்கின்றோம். ஆனால் ஆண்டவர் அளிக்கும் சமாதானம் உலகம் தரும் சமாதானம் போன்றது அல்ல என்றும் அதே இயேசுதாமே கூறியுள்ளார். அப்படியாயின் அவர் தரும் சமாதானம் எத்தகையதோ?

திருவிவிலியத்தைப் புரட்டிப் பார்த்தால் அங்கே அவரின் சமாதானம் எத்தகையது என்று நாம் காணமுடிகின்றது. அது படைப்பலத்தினால் உண்டாகும் அமைதியில்லை. பலவந்தத்தினால் ஏற்படும் அமைதியும் இல்லை. ஒருவரை ஒருவர் போரிலே வென்று அடிமைப்படுத்துவதனால் ஏற்படும் அமைதியுமன்று. ஆடணவர் அளிக்கும் அமைதி நீதியின் அடித்தளத்திலும் நேர்மைத்தன்த் அடித்தளத்திலும் ஏற்படும் மனமாற்றத்தினால் கட்டியெழுப்பப்படும் புதிய உறவு நலையாகும் எசாயா இறைவாக்கினர் 32ம் அதிகாரம் 17ம் வாக்கியத்தில் கூறுவதுபோல் "நீதியால் விளையும் பயன் சமாதானம். நீதியின் பயன் அமைதியும் என்றென்றும் நீடிக்கும் அச்சமில்லா வாழ்வும்" ஆகும்.

விவிலியத்திலே அமைதி, சமாதானம் என்னும் வார்த்தைக்கு சலோம் என்னும் எபிரேயச் சொல் பாவிக்கப்படுகின்றது. சலோம் என்னும் சொல் ஒருவரையொருவர் நலம் விசாரித்து வணக்கம் செலுத்தும் ஒரு வார்த்தையாகவும் மற்றவர் நலமுடன் வாழ ஆசிகூறுவதையும் அடித்தளமாகக் கொண்டதாய் விளங்குகின்றது. இன்றும் இப்பழக்கத்தை நமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் சகோதரர்களிடம் நாம் காணமுடிகின்றது. அவர்கள் பாவிக்கும் சலாம் என்னும் அரபுச் சொல்லுக்கும் சலோம் என்னும் எபிரேயச் சொல்லுக்கும் பொருள் ஒன்றே.

அத்துடன் அமைதி சலோம், என்னும் வார்த்தைக்கு இன்னுமொரு ஆழ்ந்த அர்த்தமும் உண்டு. அதாவது ஒருவரது முழு நலனையும் பாதுகாப்பையும் சுட்டிக்காட்டி நிற்பதாகும். உதாரணமாக இருவருக்கிடையேயுள்ள உறவு முறையிலே பூரணத்துவம் தென்படுதல், உறவு முழுமையாக இருப்பதற்குத் தடையாயுள்ள ஒளிப்பு மறைப்பு ஒன்றுமே இல்லாத ஒரு சுமுகமான நிலையைச் சுட்டிக்காட்டி நிற்பதாகும். இருவருக்கிடையேயுள்ள உறவு முறிவதற்கு, அல்லது களங்கம் அடைவதற்கு எந்த ஒரு காரணமும் இல்லாத நிலையாகும். அத்துடன் இறைவன் தரும் அமைதி பாதுகாப்பான ஒரு சூழலை மக்களிடையே உருவாக்கும் தன்மை வாய்ந்தது. இதனால் அனைவரும் அச்சமின்றி வாழவும், நடமாடவும் கூடியதாக இருக்கும். “சமாதானமான இருப்பிடத்திலும், அச்சமறியாக் கூடாரங்களிலும், அமைதி நிறைந்த இல்லங்களிலும் நம் மக்கள் குடியிருப்பார்கள்” என்று எசாயா இறைவாக்கினர் வாயிலாக நமக்குச் சொல்லப்படுவது இதுவே. இச்சமாதானம் மனித மனங்களிலும் மனித உறவுகளிலும் மிளிரும் ஒன்றாகும். இத்தகைய சமாதானத்தையே என் சமாதானம் என்றும் அதனையே உங்களுக்கு விட்டுச் செல்கின்றேன் என்றும் இயேசு ஆண்டவர் அன்று கூறினார்.

அத்தகைய ஒரு சமாதான ஒளி இன்று நம் நாட்டில் ஒளிர ஆரம்பித்துள்ளதை நாம் காண்கின்றோம். போராளிகளும் அரசும் இணைந்து இன்று ஏற்படுத்திக் கொண்டு வரும் சுமுகநிலை இதனையே சுட்டிக்காட்டி நிற்கின்றது. உயிர்ப்பின் திருநாள் காலத்தில் இந்த முன்னெடுப்புகள் எல்லாம் நீடிய, நிலையான பயனளிக்க வேண்டுமென நாம் மன்றாடுவோமாக. இப்பாதையிலே முன்னிற்கும் இரு திறத்தாரையும் அவர்களது சகாக்களையும் பாராட்டுவதோடு நின்றுவிடாமல் இவ்விரு பகுதியினரின் கரங்களையும் நாம் பலப்படுத்த வேண்டும். இவர்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்க வேண்டும். நிரந்தரமான போர் நிறுத்த ஒப்பந்தத்தோடு நின்றுவிடாது, நீதியானதும் எல்லா இனமக்களுக்கும் மன மகிழ்ச்சியை அளிக்கும் நீடிய ஓர் உடன்பாடு இனப்பிரச்சினை மட்டில் ஏற்பட்டு எல்லோரும் இன்பமாய் வாழும் பாக்கியத்தை உயிர்த்த ஆண்டவர்தாமே அருள வேண்டுமென்று மன்றாடவேண்டியது நம் கடமையாகும்.

மேலும் இயேசு அளிக்கும் அமைதி இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் ஏற்படும் அன்புறவின் பாலமாகும். மனிதன் தன் பாவத்தால் இறைவனிடம் இருந்து பிரிந்து பகைமையில் வாழ்கின்றான். இப்பகைமை உணர்வும், பகைமை உறவும் இயேசுக் கிறிஸ்துவில் சீராக்கப்பட்டுப் பிரிந்த மனிதன் மீண்டும் கடவுளோடு ஒப்புரவாகி, சமாதான உறவை அடைகின்றான். “முன்னர் நீங்கள் இறைவனோடு உறவிழந்து நின்றீர்கள். அவர்மீது பகையுள்ளம் கொண்டவர்களாய் தீய செயல்களில் மூழ்கியிருந்தீர்கள். இப்பொழுதோ உங்களை மாசுமறுவும் குறைபாடின்றியும் பரிசுத்தவர்களாய்த் தம் திருமுன் நிறுத்த இறைவன் விரும்பி கிறிஸ்துவினுடைய சாவின் வழியாய் உங்களைத் தம்மோடு ஒப்புரவாக்கினார்” என்று பவுல் அப்போஸ்தலர் கூறுவது போன்று நாமும் விசுவாசத்தினால் இறைவனுக்கு ஏற்புடையவர்களாகி, நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து வழியாகக் கடவுளுடன் சமாதானம் அடைந்தவர்களாய் நமது பாவப் பழக்க வழக்கங்களையும் பகையுணர்வுகளையும் விட்டுவிட்டவர்களாய், வாழ்வினையே மாற்றியமைத்து நம்மையே புதுப்பித்துக்காள்வோமாக. “சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவார்கள்” என்ற இயேசுவின் வார்த்தைக்கு ஏற்ப இறைப்பிரசன்னம் நிறைந்த அமைதி நம் மத்தியில் குடிகொள்வதாக. மனித உயிருக்கு மதிப்பு இருப்பதாக. மனித மாண்பு பேணப்படுவதாக. மனிதன் இறைவனின் சாயல் என ஏற்றுக்கொள்ளப்படுவானாக. மனித உரிமைகள் மதிக்கப்படுவதாக. மனித உறவுகள் போற்றப்படுவதாக. நீதி நெறியுடைமை நம் நாட்டில் ஆறுபோல் பெருக்கெடுத்து ஓடுவதாக.

**Rev. Dr. Dominic Saminathan**
*Eastern University*
*Sri Lanka.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லமை கீதங்கள்

அ. ச. பாய்வா

## ஒரு தொகுகை

இந்த விதைக்குள் தூங்கிக் கிடந்த அந்த விருட்சத்தைக் கண்டு பிடித்தவன் யாரோ! 'வல்லமை கீதங்கள்' ஒலித்த அன்றே இந்த மறைமாவட்டமும், இசை வட்டாரமும் ஒருகணம் சிலிர்த்துக் கொண்டது.

இதனை வெறுமனே ஒரு 'நல்ல முயற்சி' யென்று சொல்லிவிட்டு வாளாவிருப்பது, அந்த வெளி யீட்டின் கருவூலம், ஜனன மென்கிற நெடும் பயணத் தினிடையில் நிகழ்ந்தேறிய ஆக்கினைகளைக் கொச்சைப் படுத்துவதாகவே அமையும்.

இதனை இனனொரு விதமாய்ச் சொல்வ தென்றால், குறிப்பிடக்கூடிய இசைப்புலமையோ, மொழித் திறனோ, குரல்வளமோ இல்லாத ஒரு சாதாரணரைக் கொண்டியக்கியது வேறொன்றுமல்ல, அந்த இறைவல்ல மையென்பதே வாஸ்தவம். இளந்துறவி அருட்பணி றொபின்சன் போலைப் பொறுத்தளவிலும் இந்த மண் ணைப்பொறுத்தளவிலும் இது ஒரு சாதனையே.

சாதாரண வரிகளை எளிய மெட்டுக்கள் மூலம் VOICE MODULATION என்கிற குரலாக்கல் உத்தியைக் கையாண்டு (இந்தக் கலை ஓரளவாகுதல் இசை யோடிணைந்தவர்களுக்கே பொருந்தும்) சில இடங்களில் கத்திமேல் நடந்து (உ+ம் என்வாழ்வில் நடக்கும் ஒவ் வொரு காரியமும் என்கிற சங்கீத மெட்டு) பிர்காக்களைத் தவிர்த்து மிகவும் கவனமாகக் கையாண்டிருக்கிறார். குறிப்பிட்ட அந்தப் பாடலை மனோவைக் கொண்டு பாடவைத்திருந்தால் அதன் சிறப்பம்சங்கள் வெளிக் கொணரப்பட்டிருக்கும்

அருட் தந்தையவர்கள் உச்சரிப்பில் (லகரளகரம்) கவனம் செலுத்தவேண்டிய அதே வேளையில் நமது நாட்டுப் பாணியில் உச்சரித்துப் பாடுவதே நலம். ஏனென்றால் இதன் பின்னணி அறியாதவர்கள் இதனையொரு முற்று முழுதான இந்தியத் தயாரிப்பாகக் கருத இட முண்டு.

தங்களை இசை விற்பன்னர்களென்றும் பாடகர்களென்றும் கருதிக் கற்பனைலோகத்தில் சஞ்சாரிக்கும் பழம் பூனைகளுக்கு இந்த முயற்சி ஒரு மரண அடி.

துல்லியமான ஒலிப்பதிவில் பாடல்கள் முழுமை யிலும் அள்ளித்தெளித்த அருமையான இசையில் (ஈழத்து முயற்சிகளாய் இதுவரை மேற் கொள்ளப்பட்டவைகளில் ஒலிப்பதிவிலும் இசையமைப் பிலும் முதன்மை பெறும் கையடக்கத்தட்டு (CD) இதுவென்றாலும் பொருந்தும்)

காலத்தின் சுவையுணர்ந்த சாஸ்திரிய, தெம்மாங்கு, மேற்கத்திய எனப் பல்சுவை ரசனைக்குரிய மெட்டுக்களில், நின்று நெடுநாள் நிலைக்கக்கூடிய, இறகால் வருடுவது போன்ற உணர்வினை ஏற்படுத்தும் 'என் யேசுவே என் சொந்தமே....', தெம்மாங்குச் சாயலில் கொட்டாங்கச்சி இசையிலமைந்த 'வல்லமையின் ஆண்டவர் தாமே ...', என் தெய்ம் என்னைக் கைவிடமாட்டார்... 'என் பாவம் நினைத்து ..', உம்மையன்றி வேறு செல்வம்..' போன்ற பாடல்கள் திரும்பத்திரும்பக் கேட்கவைப்பவை.

பாடல்களைப் பொறுத்தளவில், தனது மனதி லெழுந்த உணர்ச்சிகளை அப்படியே கொட்டியிருக்கிறார் பாடலாசியராய் அருட்தந்தை. ஆனால் பாடல்கள் (LYRIC) ஏதோ ஒரு சிறு கவிதைவடிம் (POETIC VERSION) பெற்றிருந்தாலோ, அல்லது இசைச் சொற்களால் (MU SICAL WORDS) நிரவப்பட்டிருந்தாலோ சில இடங்களில் ஏற்பட்ட உச்சரிப்புத் தடுமாற்றத்தைத் தவிர்த்து சரள நிலை யைப் பேணியிருக்கலாம். வரிகளின் வீச்செல்லையும் செறிவின் பரிமாணத்தைத் தொட்டிருக்கும்

யாவற்றிற்கும் மேலாய், 'நம்மவர்' என்கின்ற உணர்வும், நம் மண்ணின் 'விதை' என்கின்ற பெருமிதமும் நம் எல்லோரையும் ஆட்கொள்ளுமிவ் வேளையில், இறை புகழ்பாட எந்த இசையுமே தேவை யில்லை யென்கிற யதார்த்தத்துக்குமப்பால் 'அன்னிய மண்ணில் விளைந்ததுதானே இந்த விதை' என்கின்ற ஒரு சிறு நெருடலைத் தவிர, யாவும் சம்பூரணம்

வல்லமை பெற்ற உம்
நாவினில் ஆண்டவர்
வார்த்தைகள் வலிமையுறும் - மண்

வல்லமை கீதங்கள்
வடித்த உம் நெஞ்சினை
வாழ்த்தியே பெருமையுறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் பெறுவோம்


(பி. தமிழ்ச் செல்வன் மாசிலாமணி)

பாரினைத் தூய் அன்பாலே ஆள வந்த
பரன் ஏசு மீதுபாரச் சிலுவை வைத்து
காரித்துப்பி கைகாலில் ஆணிய றைந்து
கனிவில்லார் சிலுவையிலே அறைந்து கொன்றார்
சூரியனைக் கைகளினால் மூடும் போக்கால்
சுதன் ஏசு தனைக்குழியில் அடக்க லானார்
நீரில் மூழ்கி குளிப்பவன் பின் எழுவது போல்
நேயமகன் மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்தார்

கல்லறையைக் காவல்காத்த சேவகரும்
கர்த்தனவர் உயிர்பெறலைக் கண்டு விட்டார்
சொல்லிவிட முடியாத வியப்பில் அந்நோர்
சுற்றித்தரை மீதினிலே மயங்கி வீழ்ந்தார்
மெல்ல அவர் கண் விழித்துப் பார்த்த போது
மேலெழுந்து வானோக்கிச் செல்லுகின்றார்
நல்லவர்கள் நெஞ்சினிலே நாளும் பொழுதும்
நம்மீட்பர் உயிர்பெற்று வாழுகின்றார்

காலையிலே கல்லறைக்கு வந்த மூன்று
கன்னியர்கள் கல்லறையும் திறந்திருக்க
பேழையிலே கொண்டுவந்த வாசனையை
பக்கத்தில் வைத்துவிட்டு பதைப் பதைத்தார்
சோலைமலர் போலவந்த வானதூதர்
தேவனையா தேடுகின்றீர்? அவரு யிர்த்தார்
ஆலைசங்கு ஓசையென அதனைக் கூற
அப்போதே சீடரிடம் அவர்விரைந்தார்

ஆலயத்தை இடித்திடுங்கள் மூன்றாம் நாளில்
அப்படியே கட்டிடுவேன் என்றார் ஏசு
சீலமற்ற செருக்குமனம் படைத்த யூதர்
சிறப்புமிகு சொற்கருத்தை உணர வில்லை
ஞாலத்திலே இறைவனுக்கு எமது முன்னோர்
காலமெல்லாம் கட்டியதை மூன்று நாளில்
மீளக்கட்டு வானோ இவன்? வசைமொழிந்தார்
மூன்றாம் நாள் உயிர்ப்பேனென்ற பொருள றியார்



உயிர்த்தபின்பு எம்மாவூஸ் நகர்க்குச் சென்றார்
உடன்வந்த தோழரொடு பந்தி யமர்ந்தார்
உயிர்த்தயேசு சீடருக்குக் காட்சி தந்தார்
உங்களுக்கு சமாதானம் எனப்ப கர்ந்தார்
மோயீசன் சட்டம்முதல் இறையு ரையில்
எனக்குண்டு சாட்சியென காயங் காட்ட
உயிர்பெற்ற ஆண்டவரில் உவகைக் கொண்டார்
உவப்போடு திருமகனின் சாட்சி யானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியமணி க. தா. செ. வின்

# 'கன்னங்குடா உழு தொழிற் பள்ளு'

## தமிழகப் பல்கலைக்கழகம் பேராசிரியர்ஆய்வு மாநாட்டில் இடம் பெறுகிறது

பழம் பெரும் தமிழ்க்கிராமமான'கன்னங்குடா' பாரம்பரிய மரபுகளைப் பேணிக்காத்து வருவதால் 'கன்னிகழ்யாத கன்னங்குடா' என்றும் கூத்துக்கலையின் தொட்டிலாக இருப்பதால் 'கூத்து நகர் என்றும் பெயர் பெற்றது'

இக்கிராமத்தைப் பற்றி இலக்கிய மணி இலக்கிய கலாநிதி கா. தா. செல்வராசகோபால் 'கன்னங்குடா உழு தொழிற்பள்ளு, என்ற தலைப்பில் ஒரு நூலை ஆக்கி கனடா றிப்ளெக்ஸ் அச்சகத்தில் பதிப்பித்து வெளி யிட்டிருந்தார்.

இந்நூல் சென்னையிலுள்ள பேராசிரியர் மு. இளங்கோவன் கவனத்தை ஈர்த்து அவரது ஆய்வுக்கட்டுரை ஒன்றையும் உருவாக்கியது. இக்கட்டுரை சென்னை கிறிஸ்தவக்கல்லூரியில் எதிர்வரும் மே மாதம் 12 - 18 தேதிகளில் நடைபெறவுள்ள இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் 33ம் கருத்தரங்கில் இடம்பெறவுள்ளது. இக்கருத்தரங்கில் சுமார் ஐநூறுக்கு மேற்பட்ட பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இந்நூலில் உள்ள 'உழுதொழிற் சொற்கள்' சென்னையில் வெளிவரும் இதழ்களில் க.தா. செ. பற்றிய குறிப்புகளுடன் வெளிவரும் எனவும் பேராசிரியர் இளங்கோவன் அறிவித்துள்ளார்.

'கன்னங்குடா உழுதொழிற்பள்ளு' முதலான (நீரா நிகண்டு வயலும் வழியும்; வதனமார் வழிபாடு; இருபாஸ்த மரபுக் கூத்துக்கலை) நூல்கள் தமிழகப் பதிப்புகளாக வெளிவரலாம் எனவும் பேராசிரியர் இளங்கோவன் அறிவித்துள்ளார்.

மட்டக்களப்புக் கிராமம் ஒன்றின் மகத்துவம் சென்னைப் பல்கலைக்கழக மட்டத்தில் அறிமுகமானது பெருமைக்குரிய விடயமாகும்.

தகவல் '*அன்புமணி*'

## மட்டக்களப்பில் தவக்கால ஆற்றுகை

## கல்வாரிப் பூக்கள்

## முத்தமிட்டோ காட்டிக் கொடுத்தாய்

தவக்கால - புனித வாரத்தை முன்னிட்டு மட்டக்களப்பு புனித மரியன்னை சேவா சங்கமும், மட்டக்களப்பு யேசுசபை மேலாளர் அருள்தந்தை போல் சற்குண நாயகம் அடிகளும் இணைந்து தயாரித்த "கல்வாரிப் பூக்கள்" நாட்டியநாடகம் கடந்த மார்ச் மாதம் 29ம் திகதி பெரிய வெள்ளியன்று மேடை ஏறியது. மட்டக்களப்பில் புனித மரியாள் இணைப்பேராலய முன்றலில் இடம் பெற்ற இந்நிகழ்வில் வித்திய ஜோதி, பிரேம் ஜோதி, ஜீவன், ஜீவி, சாந்திபவான், யேசு பவான், வயல்வெளிப்பூங்கா, லோயோலா மாணவ மாணவியருடன் புளியந்தீவு புனித மரியன்னை இணைப்பேராலய பங்குக் கலைஞர்களும் பங்குகொண்டனர். இதற்கான பிரதியை ஆக்கி, பாடல்களையும் இயற்றி நெறிப்படுத்தியவர் திரு. அ. இருதயநாதன். நடனத்தை அமைத்து நெறிப்படுத்தியவர் செல்வி. ஷார்மிளா கொரேரா. இதேவேளை அதேதினத்தில் கல்லடி டச்பார் புனித இன்னாசியார் ஆலய முன்றலில் இயேசுசபை யோசேப் மேரி சுவாமிகளுடன் டச்பார் பங்கு மக்களும் இணைந்து "முத்தமிட்டோ காட்டிக் கொடுத்தாய்" என்னும் தவக்கால ஆற்றுகை ஒன்றை அரங்கேற்றினர். ஏற்கனவே பல மேடைகளைக் கண்ட இவ்வாற்றுகை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தினால் ஒளிப்பதிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. பெருந்திரளான மக்கள் இந்நிகழ்வினைக் கண்டு களித்தனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்தமிக்காத உறவுகள்

பீட்டர் ஒரு வங்கி அதிகாரி. அந்த ஊருக்கு அண்மையில்தான் மாற்றம் ஆகி வந்திருந்தான். திருமணமாகி இரண்டு வருடங்கள் சந்தோஷமாக வாழ்ந்தவனுக்கு, இப்போது மனைவியையே பிடிக்காமல் போய்விட்டது. அதற்குக் காரணம் திடீரென ஏற்பட்ட காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, அவ பெலவீனமாகிப் போனதுதான். எனவே மனைவியிடமிருந்து உடனே விவாகரத்துப் பெற்று, வேறொருத்தியை மணமுடிக்க வேண்டுமென்ற முடிவில் விவாகரத்துக்கும் ஏற்பாடு செய்திருந்தான். மனைவியிடம் விவாகரத்துக் கேட்டு அனுப்ப வேண்டிய பத்திரத்தையும் வக்கீல் காலையில் தான் பீட்டரிடம் கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போயிருந்தார். அதை உடனே ரெஜிஸ்டர் போஸ்டில் மனைவிக்கு அனுப்ப வேண்டுமென்ற முடிவோடு வீட்டை விட்டு வெளியே வந்தான். பீட்டர் வெளியே வரவும், தபாற்காரன் வாசலுக்கு வரவும் சரியாயிருந்தது. 'இது உங்களுக்கு வந்த கடிதம்' என ஒரு பிறவுன் நிறக் கவரை பீட்டரிடம் கொடுத்துவிட்டு, தபாற்காரன் போனான். கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான். அவன் மனைவி அவனுக்கு அனுப்பிய கடிதம். அலட்சியமாக அதைத் தூக்கிக் காரின் இருக்கையில் எறிந்து விட்டு. விவாகரத்துப் பத்திரத்தோடு காரிலேறி, தபாற்கந்தோரை நோக்கி விரைந்தான்.

தபாற்கந்தோர் ஆலயத்திற்கு அருகில் அமைந்திருந்தது. அன்று ஆலயத்தில் திருமணப் பூசை. கூட்டம் கூட்டமாக மக்கள் போய்க் கொண்டிருந்தார்கள். பாதை ஒரமாகக் காரை நிறுத்திவிட்டு, தபாற்கந்தோருக்குள் நுழைந்தவனின் கண்களில் பங்கு மேய்ப்புப்பணிச்சபையிலிருக்கும் நீட்டா டீச்சரும், அக்னஸ் அன்டியும் பட்டார்கள். 'என்ன தம்பி ஊருக்குக் கடிதம் போடவா வந்த' என நீட்டா டீச்சர் கேட்க. 'ஓம் டீச்சர்' என ஒரு வார்த்தையில் பதிலளித்துவிட்டு திரும்பியவன், டீச்சரும் அக்னஸ் அன்டியும் உரையாடியதுக்கு காது கொடுத்தான்.

'பிறகு அக்னஸ் உன்ட மருமகளுக்கு பிள்ளைகள் ஒண்டுமில்லையா? கலியாணம் முடிச்சி 5 வருசமாக்கும் என்ன?' டீச்சர் கேட்டதுக்கு 'அது தான் டீச்சர் பெரிய பிரச்சினை 5 வருசமாகியும் ஒரு பூச்சி, புழு வயித்தில பிடிக்க மாட்டன் என்டிது. செக் பண்ணினதில பெலவீனமாம் என்டிராங்க, அவளை வச்சிட்டு என்ன செய்யிற? அதால அவள டைவஸ் பண்ணிட்டு, வேறொருத்திய முடி எண்டு மகனிட்ட சொன்னன்' என்று தன் சோகத்தை அக்னஸ் கூறி முடித்தாள்.' அதுக்கு உண்ட



மகன் சரியென்டிட்டானா?' டீச்சர் கேட்க 'அவளுக்குத் துரோகஞ் செய்ய ஏலாதாம் பிள்ள இல்லாட்டி பறவாயில்லையாம். ஒரு புள்ளய தத்தெடுத்து வளர்க்கப் போறம் என்டிரான்' பெருமூச்சோடு அக்னஸ் முடிக்கிறாள்.

' ஏன் அக்னஸ் சந்தோஷமா வாழுகிறதுகள பிரிக்க பார்க்கிறாய்? அவள்ட குறை அவனுக்கு பெருசாத் தெரியல்ல ஒரு புள்ளய தத்தெடுத்து வளர்க் கட்டுமே' என டீச்சர் கூறியதும்' இப்பிடி பிள்ள ஒண்டு பெத்தெடுக்க ஏலாதவளோட என்ட மகனை வாழவிட மாட்டன்' ஆத்திரத்தோடு கூறுகிறாள் 'அக்னஸ் கொஞ்சம் பொறு. உனக்கு 7 வருசத்துக்கு பிறகு தானே உன்ட மகன் பிறந்தான். உன்ட புருசனும் 5 வருசத்தால பிள்ளை பெற ஏலாதவளென்டு உன்னை டைவஸ் செஞ்சிருந்தா உன்ட நிலை எப்பிடியிருந்திருக்கும். அதோட அவள் மலடெண்டு இன்னொருத்திய கட்டிக் குடுக்கப்போறா. அவளுக்கும் என்னென்ன குறை யெண்டு உனக்குத் தெரியுமா?' டீச்சர் கேட்கிறா. ' எல்லாம் விசாரிச்சுத்தானே கட்டிக்குடுக்கப் போறன்' என்கிறாள் அக்னஸ் அன்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'என்னத்த விசாரிச்சுக் கட்டிக்குடுத்தாலும் இப்ப சொல்லிட்டா வருத்தம் வருகுது. சரி அவளுக்குத் தான் குறை இல்லாட்டியும். திடீரென்று உன்ட மகனுக்கு ஒரு வருத்தமோ ஆக்சிடென்டோ நடந்து கை கால் பாதிக்கப்பட்டா ரெண்டாவதா வாற அவளும் உன்ட மகன் குறையுள்ளவனென்டு டைவஸ் பண்ண மாட்டாளெண்டு எப்பிடித் தெரியும்? நீ மகனுக்கு இன்னொருத்திய கட்டிக்குடுக்க நினைக்கிற மாதிரி அவளப் பெத்ததுகளும் மகளுக்கு இன்னொரு வாழ்க்கை அமைச்சிக்குடுக்க நினைக்கலாம் தானே?' டீச்சர் கேட்க ஏதோ ஒன்று மூளையில் தட்டுப் பட்டவளாக அக்னஸின் கண்கள் கலங்கியது. அதைக் காட்டிக் கொள்ளவில்லை. 'ஏதோ அக்னஸ். யோசிச்சு ஒரு முடிவெடு. சின்னதுகளப் பிரிக்காத எனக்கு நேரம் போகுது. அப்ப வாறன்' டீச்சர் கூறிவிட்டுச் செல்ல, தன் குற்றத்தை உணர்ந்தவளாக நல்லதொரு முடிவோடு அக்னஸ் அன்டி செல்கிறாள்.

டீச்சரின் சொற்களால் சிலையாகிநின்றான் பீட்டர், உண்மைதான், நான் என் மனைவியை உதறியது போல், எனக்கு வரும் இரண்டாம் மனைவி ஏதோ ஒரு சாட்டைச் சொல்லி என்னை உதறமாட்டாளென்று எனக்கெப்படித் தெரியும். கடவுள் எனக்கு அமைத்த என் மனைவியே நல்லவள். அமைந்த வாழ்க்கையே நல்லது தானென' நினைத்தபடி, விவாகரத்துப் பத்திரத்தோடு வந்து காரில் அமர்ந்த வனின் காதுகளில் திருமணப் பூசையில் மணமக்களின் வார்த்தைகள் மணியோசையோடு சேர்ந்து வந்து கணீரென்று ஒலிக்கிறது. 'இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்'. பீட்டரின் தொண்டைக்குள் ஏதோ ஒன்று வந்து அடைக்க தன் திருமண நாளை அசைபோட்டுப் பாக்கிறான். காரிலிருந்த லைட்டரை எடுத்து, விவாகரத்துப் பத்திரத்தைப் பற்ற வைத்து காருக்கு வெளியே வீசுகிறான். மனப் பாரம் குறைகிறது. பக்கத்து இருக்கையில் கிடந்த மனைவியின் கடிதத்தை மீண்டும் பிரித்துப் படிக்கிறான். அதில் 'உங்கள் ஒரு துளி அன்பு போதும் நான் விரைவில் குணமாவேன். கூடிய சீக்கிரமே எழுந்து உங்களுக்கு என் இறுதி மூச்சு வரை பணிவிடை செய்வேன். ஒவ்வொரு நாளும் உங்கள் வரவுக்காக காதிருப்பேன். எமக்காக மரித்த எம் அன்பு யேசு எம்மைப் பிரியவிடாது காப்பார்' என்றிருந்ததும் கண்கள் கலங்குகிறது. அவன் மனக்கண் முன் மனைவியின் அன்பு முகம் தெரிகிறது. உடனே புறப்பட்டு அவளைப் பார்க்கச் செல்ல வேண்டு மென்ற உறுதியான முடிவோடு காரைச் செலுத்துகிறான்.

(யாவும் கற்பனை)

எழுதியவர்
திருமதி சு.பொளின் நீற்றா
கல்முனை

## கோட்பாடு அல்ல உறவு

கத்தோலிக்கம் என்பது கோட்பாடு அல்ல. இயேசுவோடு கொள்ளுகின்ற உறவு என்று கூறினார் கர்தினால் கிளேடியே கோமஸ் திருத்தந்தையும் அவரது உடன் உழைப்பாளர்களும் ஒரு வார தியானத்தை கடந்த பெப்ரவரி 20ம் திகதியன்று தொடங்கினர். தியானத்திற்கு வழிகாட்டியாகத் திருத்தந்தை சாந்தாவொலோ பெரும் மறை மாவட்ட பேராயர் கர்தினார் கிளேடியோ கோமசை நியமித்துள்ளார். நேற்றைய முதல் உரையில் கர்தினால் இயேசுவின் அறிவையும் கோட்பாடுகளையும் புகுத்துவது நல்லதுதான். ஆனால் அவைகள் யாவும் அறிவு சார்ந்தவைகளாக, சட்டங்களாக, கோட்பாடுகளாக மட்டுமல்லாமல் இன்று நம்மைச் சுற்றி நடக்கும் அனைத்தையும் மனதிற் கொண்டு இயேசுவோடு நாம் கொள்ளுகின்ற உறவிலே இருக்க வேண்டுமென்று கூறினார். மேலும் எல்லாரும் இன்று தங்கள் பூட்டப்பட்ட இதயக் கதவுகளைத் திறப்பதில்லை. ஒருவேளை இயேசு உள் நுழைந்து தங்களின் சுயநலப் போக்குகளை அழித்து விடுவாரோ என்று அஞ்சுகிறார்கள். என்று கூறிய கர்தினால், ஆயர்களாகிய நாம் ஏழைகளோடு தோள் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கிய மஞ்சரி

இலக்கியங்களில் போற்றத்தக்க இலக்கியமாகவும், உயர்தரமுள்ள இலக்கியமாகவும் காணப்படுவது நமது விவிலியமாகும். உலகில் அதிகளவு அச்சிடப்பட்டதும். அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட இலக்கியமாகவும் விவிலியம் காணப்படுகின்றது. இதில் இன்னொரு விடயத்தையும் நாம் கவனிக்க வேண்டியுள்ளது. அதிகமானோரின் கூட்டுமுயற்சியே அதாவது அதிகம் பேர் சேர்ந்து எழுதியுள்ள ஓர் இலக்கியமாகவே திருவிவிலியம் தோன்றுகின்றது.

இதில் உரைநடை இலக்கியம். கவிதை இலக்கியம் என்பன உள்ளடங்கியுள்ளன. கவிதை வரிகளாகவே காணப்படுகின்றன. குறிப்பாக புதிய பொது மொழி பெயர்ப்பில் எளிய நடையில் இலகுவாக விளக்கக் கூடிய வகையில் திருப்பாடல்கள் காணப்படுகின்றன.

இவை தவிர உவமைகள், முதுமொழிகள் என்பன உட்பட இலக்கியத்திற்குரிய பல்வேறு அம்சங்களும் விவிலியத்தில் நிறைந்து காணப்படுகின்றன. இதனைப்பற்றி எழுதப் போனால் பல புத்தகங்களே எழுதலாம் என்று அறிஞர் கூறுவர்.

தற்காலத்தில் விவிலியத்தின் மறைபரப்புப்பணி வெவ்வேறு வடிவங்களில் தோற்றம் பெற்றுள்ளன. கவியரசு கண்ணதாசனின் இயேசு காவியம் இதில் ஒன்று. அவர் எழுதிய கடைசிக்காவியமும் இது வென்றே கூறப்படுகின்றது.

எனினும் மக்களைச் சென்றடையக் கூடிய வகையில் காணப்படுவது ஒலி, ஒளி வடிவ உருவாக்கங்களே. குறிப்பாக இலங்கை நாட்டவரின் முயற்சிகளால் சில ஒலிப் பேழைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதில் இசையமைப்பாளர் அம்புறோஸ் பீற்றர் அவர்களின் இசையமைப்பில் தமிழக சாந்தோம் கலைத்தொடர்பு நிலையத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட 'திருப்பாடல்கள்' இசைநாடா மூன்று பாகங்கள் வெளிவந்துள்ளன. அருமைமயான பாடல்கள் விவிலியத்தில் நூற்றைம்பது திருப்பாடல்கள் உள்ளன. அதில் ஒரு பகுதியை இம்மூன்று ஒலிப்பேழைகளும் உள்ளடக்கியுள்ளன.

# திருவிவிலியம்! ஓர் இலக்கியமாக

இன்னொரு முயற்சியாக நமது இளங்குரு. அருட்பணி போல் றொபின்சன் அவர்களின் அற்புத முயற்சியில் வெளிவந்துள்ளது 'வல்லமை கீதங்கள்' ஒலிப் பேழை. உண்மையிலே அவையனைத்தும் வல்லமை மிக்க கீதங்களே. தென்னிந்தியாவில் ஒலிப்பதிவு செய்யப்பட்டாலும் இருபாடல்களில் மட்டுமே வேற்றுக் குரல்கள் தலைகாட்டுகின்றன. ஏனைய எல்லாப்பாடல்களையும் அருட்தந்தை றொபின்சன் அவர்களே பாடியுள்ளார். பாடல்களை இயற்றியவரும் அவரே! இசையமைத்தவரும் அவரே! எல்லாப் பாடல்களும் அற்புதம்! அற்புதம்!!

எல்லாக் கத்தோலிக்கரின் வீடுகளிலும் இவ்வொலி நாடா திரும்பத் திரும்ப இசைக்கப்பட்டுவருவதைக் காணக் கூடியதாக உள்ளது. சில ஆட்டோக்களிலும் இப்பாடல்களைக் கேட்கக் கூடியதாக உள்ளது.

அனேக வீடுகளில் குழந்தைகள் இப்பாடலை மீண்டும் மீண்டும் கேட்டு ஆடுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இப்படியாக நமது விவிலியக் கருத்துகள் பல்வேறு இலக்கிய வடிவங்களில் விஷ்வரூபம் எடுப்பதன் மூலம் 'நற்செய்தி' பரப்புப்பணி வேகமடைவதனை நாம் காண்கின்றோம்.


**– ஆழியோன் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவில் உதித்த யேசு சூரியன்

- வாகரைவாணன்



அப்பத்திலும்
இரசத்திலும் மட்டுமா
நீ இருக்கின்றாய்
இல்லை
எல்லாமே உன்
இயக்கம் தான்!

மீண்டும் நீ வருவாய்
மேகத்தின் மீது
நீண்ட வானம் அப்போது
நிச்சயமாய் அதிரும்!

மாட்சிமையோடு
மன்னன் நீ
காட்சி தருவாய்
அதுதான்
மீட்பின் காலம்

நீதி
தண்டிக்கப்பட்டது
உன்
வாழ்க்கையில் தான்
நிகழ்ந்திருக்கிறது

கன்னத்தில் முத்தமிட்டு
உன்னை ஒருவன்
காட்டிக் கொடுத்தபோதும்
நண்பனே என்று தான்
நீ
நன்னயம் செய்தாய்

இன்னா செய்தாருக்கும்
இனியவை செய்ததால் தான்
நீ
இயேசுக் கிறிஸ்து

பூமிக்கு
உன் கால்படும்
போதெல்லாம்
பூரிப்பு
புற்களும்
புதுப் பிறவி எடுக்கும்

பாறையின் மீது நீ
அமர்ந்திருந்த போதெல்லாம்
அது
பஞ்சணையானது நீ
பரமன் மகன் என்பதால்

காற்றுக்கும்
உன் மீது காதல்

திறந்த வெளியில்
நீ தியானிக்கையில்
திருவுரை ஆற்றுகையில்
உன்னை அது
தீண்டித் தீண்டி மகிழும்


மலர்களுக்கும்
உன் மீது தான் மயக்கம்
காலையிலேயே
தாங்கள் தான்
முதலில்
உன்னைக் காண வேண்டுமென்று
கண் விழித்துக் கொள்ளும்

பறவைகளுக்கும்
உன்னைப்
பார்க்க ஆசை!

சேவல் தன்
செட்டைக் கையால்
சூரியனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுறுக்காக
வாவென்று
குரல் கொடுக்கும்

ஆதவனுக்கோ
என்னைக்
கண்டதும் அதிர்ச்சி
ஏது
என்னைப் போல
இன்னும் ஒருவனா
என்று!

கையைத்
தலையணையாக்கி
நீ சில சமயம்
மரங்களின் கீழே
கண்ணயர்வதுண்டு
அப்போதெல்லாம்
அந்த மரங்கள்
பொன் மலர் தூவி
உனக்குப்
பூஜை செய்யும்

கடற்கரை ஓரங்களில்
நீ
கால் பதித்த
போதெல்லாம்
அலைகள்
ஓடிவந்து
உன்னை
ஆர்வத்தோடு பார்த்தன
நீ தானே அந்த
அவதார புருஷனென்று

நண்டுகளுக்கும்
உன்னைக்
கண்டு கொள்ள ஆசை
அதனால்
பொந்துகளுக்குள்
அவை
போகவேயில்லை

நதிக்கரையின்
நாணல்களும் நீ
நடந்து போகும் போது
நான்கு பக்கமும்
வளைந்து நெளிந்து
உன்னை
நன்றாகவே பார்த்தன

கதிரவன் நீ
கண்ணுறங்கும் அழகைக்காண
மேகத்திரையை
விலக்கிக் கொண்டு
நிலவு
மெத்த ஆசையோடு
பார்க்கும்

நட்சத்திரங்களுக்கும்
உன் மீது நல்ல ஆசை
உச்சி வானில்
ஒளித்திருந்து
உன்னை
உற்று உற்றுப் பார்க்கும்

வளரும்.........

## இறையியலாளர் கைது

இனங்களுக்கிடையே அமைதியை உருவாக்க உழைத்துவரும் கத்தோலிக்க இறையியலாளர் ஒருவர் றுவான்டாவில் கைது செய்யப்பட்டுள்ளது திருச்சபையின் ஒப்புரவுப் பணிகளை தடைசெய்வதற்கான முயற்சி எனக் குற்றஞ் சாட்டியுள்ளனர் மத்திய ஆபிரிக்கப் பகுதி ஆயர்கள் றுவான்டாவின் ஈரினத்தவரிடையே பதட்ட நிலைகளை உருவாக்கி அதன் மூலம் தங்கள் அதிகாரத்தைத் தக்க வைக்க முயலும் ஒரு சில குழுக்களின் முயற்சியாலேயே இறையியலாளர் லோறியான் நிப்சிமானா கைது செய்யப்பட்டுள்ளார். எனக் குற்றஞ்சாட்டியுள்ளனர் ஆயர்கள் ஹூட்டு மற்றும் டுப்சி இனத்தவரிடையேயான ஒப்புரவுப் பணிகளை முடக்குவதற்கான முயற்சியே இவரின் கைது என றுவாண்டா, புருண்டி மற்றும் கொங்கோ நாட்டு ஆயர்கள் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளனர். ஒரே நாட்டில் வாழும் மக்களிடையே ஒப்புரவை உருவாக்கும் முயற்சியுடனேயே தலத்திருச்சபை, நாட்டின் புரட்டஸ்டான்ட் திருச்சபை மற்றும் இஸ்லாமியருடன் ஒத்திணங்கி உழைக்கின்றதெனக் கூறினார் புருண்டி ஆயர் பேர்னார்ட் புதுதீரா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கிறிஸ்தவ சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள்

கிறிஸ்தவ சமயம் நீதியையும் அன்பையும் சமத்துவத்தையும் போதிக்கின்ற சமயமாகும். மனிதர்கள் அனைவரும் கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்ட வர்கள் என்று கூறும் சமயம். திருமுழுக்குப் பெற்ற அனைவரும் கடவுளை 'அப்பா தந்தாய்' என அழைக்க உரிமை தரும் சமயம். இறைமகன் கிறிஸ்துவை தமது சகோதரனாகவும் நண்பனாகவும் பெற்றுக் தருகின்ற சமயம். இதில் இன, மொழி, வேறுபாடு கிடையாது, அனைவரும் கடவுளின் பிள்ளைகள் என சமத்துவத்தை நிலை நாட்ட வந்த சமயம். சுருங்கக் கூறின் ஒடுக்கப் பட்ட மக்களுக்கு உரிமை வாழ்வு வழங்க வந்த சமயம்.

கிறிஸ்தவ சமயம் நமக்குத் தரும் போதனை யாதெனில் 'இறைவன் நமது வானகத் தந்தை, நாம் அவரது பிள்ளைகள்' என்பதே. அதாவது இறைவன் முன்னிலையில் நாம் அனைவரும் சமனானவார்கள் நம்மிடையே வேற்றுமையோ, வித்தியாசமோ இருக்கக் கூடாது. நாம் அனைவரும் சகோதர சகோதரிகள் என்பதே. இறைவன் நல்லவர், அவர் ஏழைகள் மட்டில் அக்கறை கொண்டுள்ளார். அவர் ஏழை, எளியவர், ஒதுக்கப்பட்டோர், ஓரங்கட்டப்பட்டோரை அன்பு செய் கின்றார். அவர்களுக்கு அடைக்கலப் பாறையாகவும் உள்ளார் என்பது வேதாகமம் கூறும் வலுவான உண்மை.

அடிமைப் படுத்தப்பட்ட இஸ்ராயேல் மக்கள் படும் துன்பங்களை இறைவன் கண்ணுற்றார். அதைப் பொறுக்க முடியாமல் மோசேயை அழைத்து அவர்களை விடுதலை செய்தார். 'எகிப்தில் என் மக்கள் படும் துன்பங்களை கண்டு கொண்டேன். அடிமை வேலை வாங்கும் அதிகாரிகள் பொருட்டு அவர்கள் எழுப்பும் கூக்குரலையும் கேட்டேன். ஆம் அவர்களின் துன்பத்தை நான் அறிவேன் .... அவர்களை விடுவிக்க ..... இறங்கி வந்துள்ளேன்.' (வி.ப. 3: 7 - 8)

புதிய ஏற்பாட்டில் இயேசு இறைவனாய் இருந்தும் கூட அந்த இறைத்தன்மையை விடாப் பிடியாய்ப் பிடித்துக் கொள்ளவில்லை (பிலி 2:6) மாறாக அடிமை வடிவை எடுத்து மனிதரானார். வார்த்தையான அவர் நம்மிடையே குடி கொண்டார் (யோவான் 1:14) 'ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும் ஒடுக்கப்பட் டேரை விடுதலை செய்யவும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவும் அவர் என்னை அனுப் பினார்' (லூ 4: 18 - 19) என்று நமது பணியை அறிவித்தார். நலிந்தவர்கள், மாண்பு இழந்தவர்கள். ஒதுக்கப்பட்டவர்கள் ஓரங்கட்டப்பட்டவர்கள். தாழ்ந் தவர்கள் .... இவர்களையே 'என் அன்பார்ந்த மக்களென அழைக்கின்றார். அவர்கள் வாழ்வு பெற அதுவும் நிலை வாழ்வு பெறவே வந்தேன் என்றும் அறை கூவல் விடுக்கின்றார்.

இந்த அறை கூவலுக்கு கிறிஸ்தவர்களாகிய நாம் குறிப்பாக தமிழ்க் கிறிஸ்தவர்களாகிய நாம் எவ் விதத்தில் செவிமடுக்கிறோம் ? இன்று நம்முடைய சாதி வேறுபாடுகள். உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாடு கள், ஏழை பணக்காரன் என்ற வேற்றுமைகள் காணப் படுகின்றன. சமூகத்தில் ஒதுக்கப்பட்ட சகோதர சகோதரிகள் மனித மாண்பிழந்து, ஒதுக்கப்பட்டவர் களாக, ஓரங்கட்டப்பட்டவர்களாக, முடிவெடுக்கும் அதிகாரமற்றவர்களாக நிர்வாகத்திலே பங்கில்லாத வர்களாக இருக்கிறாகள். கிறிஸ்து ஒடுக்கப்பட்ட வர்களுக்கு உரிமை வாழ்வை வழங்க வந்தார். அவர் வழியைப் பின்பற்றுகின்ற கிறிஸ்தவர்களாகிய நாம் அம்மக்களுக்கு உரிமை வாழ்வை வழங்குவதற்கு பதிலாக அவர்களை ஒடுக்கப்பட்டவர்களாகவே ஓரங் கட்டுறோம். நாம் செய்வது தவறென்று கூட உணராத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களாக எமது தமிழ்க் கிறிஸ்தவ சமூகம் இருப்பது வருந்தத் தக்கதும் கண்டிக்க தக்கதுமானதாகும்.

இந்து சமயத்திலுள்ள சாதிப் பாதுபாடு, தீண்டாமை போன்ற கொடிய நோய்கள் கிறிஸ்தவ சமுதாயத்திலும் புரையோடிய புண்ணாக ஊடுருவி நிற்கிறது. சாதிப் பாகுபாடு எம்மிடையே தலை விரித்துத் தாண்டவ மாடுகின்றது. இந்நிலை நாம் திருமுழுக்குப் பெற்றிருந்தாலும் 'புதுப்பிறப்பாக' மாறாமல் இருப் பதையே காட்டுகிறது இன்று எத்தனையோ மக்கள் சாதியின் பெயரால் அடக்கி ஒடுக்கப்படுகின்றார்கள். ஏன் நமது மறை மாவட்டத்திலும் இத்தீய சக்திகளின் ஆதிக்கம் இல்லாமலில்லை. சாதியடிப்படையில் பங்குகள், கோயில்கள், கோயில்களில் தனி இடங்கள், தனித் திருவிழாக்கள், சேமக் காலையில் அடக்கம் செய்யத் தனியிடம் எனக் கூறிக் கொண்டே போகலாம். ஆனால் இந்நிலை மாற்றப்பட வேண்டும். அனைத்தும் பொதுவாக்கப்பட வேண்டும்.

மேலும் பல இடங்களில் பங்குச் சபைகளிலும் நிர்வாகக் குழுக்களிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இடமோபொறுப்புக்களோ அளிக்கப்படுவதில்லை. ஏன் பக்தி சபைகளில் கூட இடமளிக்கப் படுவதில்லை. இவ்வாறு இடமளிக்கப்பட்டாலும் மேல் வகுபபினர் அவர்களை எள்ளி நகையாடுகின்றனர். கிறிஸ்துவுக்கு விரோதமான இத்தகைய செயல்கள் தொடராமல் தடுக்க வேண்டியது திருமுழுக்கு பெற்ற குறிப்பாக (இளைஞர்) ஒவ்வொருவருடைய கடமையாகும்.

'நாம் அனைவரும் மனம் மாற வேண்டும். எமது சிந்தனைகளில் மாற்றம் வேண்டும். செயல்களில் அதன் தாக்கம் வெளிப்பட வேண்டும். தீண்டப்படாத தாழ்த்தப்படாத கிறிஸ்தவர்கள்' எனும் கூற்றே முரணானது. இந்நிலை கிறிஸ்துவைப் பின்பற்றும் எமக்கு அவ மானம். இதை நீடிக்க விடுவது கேவலம். கிறிஸ்தவர்களே கிறிஸ்தவர்களைத் தீண்டத் தாகதவர்கள் என்று சொல்வதும் நடத்துவதும் நாகாரீகமற்ற மனிதப் பண்பற்ற செயலாகும். (பேராயர் மிக்கேல் அகுஸ்தீன் இந்தியா)

இவ்வாறு திருச்சபைத் தலைவர்கள், சாதிக் கொடுமையை அழிக்க பல சுற்று மடல்களை வரைந்தாலும் அவை எல்லா மக்களையும் சென்றடைவதில்லை. அதாவது அடி மட்டம் வரை செல்வதில்லை. எனவே இது ஒரு குறிப்பிட்ட வகுப்பினரின் பிரச்சனை என்ற எண்ணம் ஒழிந்து இது திருச்பையின் பிரச்சனை, நமது பிரச்சனை என்ற எண்ணம் திருமுழுக்குப் பெற்ற நம் ஒவ்வொருவரிடத்திலும் உதயமாக வேண்டும். இதற்காக ஆயர், குருக்கள், துறவியர், பொது நிலையினர் என அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விழிப்புக் கல்வியளித்து அவர்களிடையேயுள்ள தாழ்வு மனப்பான்மையை போக்க வேண்டும். கலப்புத் திருமணங்களை வரவேற்று உற்சாகமூட்ட வேண்டும். மேலும் சாதியின் பெயரால் இம்மக்கள் ஒதுக்கப்படும் கோயில்களிலும், திருவிழாக்களிலும் குருக்கள் தமது வழிபாட்டுக் கடமைகளை செய்ய மறுத்து மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். மாணவர் சேர்க்கை, பணி நியமனம், நிதியுதவி இடப்பகிர்வு போன்றவற்றில் இம் மக்களுக்கு முன்னுரிமையளிக்க வேண்டும்.

எமது நாட்டில் மதவாதிகளின் ஆதிக்கம் நாளுக்கு நாள் அரசியலிலும், சமூக அமைப்பிலும் அதிகரித்து கொண்டே போகின்றது. இந்நிலையில் சாதிகளை வைத்து சண்டை போடுவது நம் அனைவருக்கும் ஆபத்தானது என்பதை உணர வேண்டும். பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மூலம் விழ்ப்புணர்வை ஏற்படுத்தி தாழ்த்தப்பட்ட மக்களிடத்திலுள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி, தன்னம்பிக்கை. சுயமரியாதை பற்றிய எண்ணங்களை ஏற்படுத்த வேண்டும். தெருக் கூத்து வீதி நாடகங்கள், பாடல்கள் ... என இன்னும் பல உத்திகளைக் கையாண்டு சாதி வேற்றுமையையும் தீண்டாமையையும் வேரோடுகளைய முனைய வேண்டும். அப்போதுதான் நாம் உண்மையாகவே கிறிஸ்துவைப் பின்பற்றுகின்ற கிறிஸ்தவர்களாக மாறுவோம்.

தொகுப்பு
சி. லோகன்
C. Y. A
கல்லாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் பக்கம்



க.பொ.த. (சாதாரணம்)
– கத்தோலிக்கம் –
* மெற்றில்டா

மாணவர்களே 10ம் தரத்திற்கான றோமன் கத்தோலிக்க சமயப் பாடநூலிருந்து இதுவரை குறிப்புகளை வழங்கி வந்தோம். இதிலிருந்து 11ந்தரப் பாடநூற் குறிப்புகள் தரப்படுகின்றன. அவற்றை வாசித்துப் பயனடைவீர்களானால் அது எம்மை மகிழ்விப்பதாக அமையும் நன்றி

## ஆய்வுப்பொருள் 01

**மனிதத் தொடர்புகள் மூலம் நிறைவான வாழ்வைப் பெறுவோம்**

**பாடம் 01 பங்கில் ஒன்றிணைவோம்.**

1.1 நாம் ஒரு பங்குத்தளத்தின் அங்கத்தவராக உள்ளோம். எனவே அதனைப்பற்றிய பூரணமான விபரங்களைத் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். நமது பங்கு, பங்குத்தந்தை, ஆலயத்தின் பெயர் கொண்ட புனிதர், மறைக்கோட்டம், மறைமாவட்டம், பங்கிலுள்ள பக்திச் சபைகள், சபைகள், சங்கங்கள், மறைமாவட்ட ஆயர் ஆகிய அனைத்து விபரங்களையும், பெயர்களையும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

1.2 குடும்பமென்பது இறைதந்தையின் அன்பை உலகுக்குப் பறைசாற்றும் சிறிய ஒன்றியமாகும். பல கத்தோலிக்கக் குடும்பங்கள் ஒன்றாகிக் கிறிஸ்தவ ஒன்றியம் உருவாகிறது. பல ஒன்றியங்கள் பங்காகிறது. பங்கு என்பது நற்செய்தியை உலகுக்கு வெளிப்படுத்தும் ஒன்றியமாகும். நாம தில் அங்கத்தவராக உள்ளோம்

1.3 விசேடமான நற்செய்திப் பணியொன்று பங்குக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஆயரால் நியமனம் பெற்ற ஓர் அருட் தந்தை ஆயரின் பிரதிநிதியாகப் பங்கை வழிநடத்துவதால்,முழுப் பங்கு ஒன்றியமும் பங்கு கொள்ளும் சபையாகச் செயற்படுகின்றது. திருமுழுக்கு மூலம் பங்குமக்களனைவரும் நற்செய்திக் குச் சான்றுபகர அழைக்கப்படுகிறோம்.

**உலகத்திருச்சபை**

இறைவன் அவருக்குச் செவிகொடுக்கவும், அவருக்காகச் செயற்படவும் திருச்சபையை அழைக்கிறார், (இணைச்சட்டம் 9:29) ஆரம்பத் திருச்சபையைப் புனித பவுல் கிறிஸ்துவின் மறையுடல் எனக் கூறுகிறார். ஆதித்திருச்சபை உலக முழுவமும் பரவியது. உலகத் திருச்சபை வெறும் கட்டிடமல்ல. கிறிஸ்துவோடு ஆழமான அன்பால் இணைந்து அவருடைய எண்ணக் கருக்களை உள்ளத்தில் கொண்டு எல்லோரையும் சகோதரராக ஏற்று உலகில் நற்செய்தியைப் பரப்பும் மக்களாவர். நற்செய்தியை மிகக் கவனமாகக் காப்பது திருச்சபையின் கடமை.

இன்று உலக முழுவதும் ஏராளமான மறைமாவட்டங்கள் உள்ளன. சாதி, குல, இன, வகுப்பு பேதங்களின்றி ஒரே இறைவனை வழிபட்டு ஒரே அப்பத்தைப் பகிரும் திருமுழுக்குப் பெற்ற பெரிய குழு இன்றைய திருச்சபையில் செயலாற்றுகிறது. செபம், தியானம், பொது வழிபாடுமூலம் ஆன்ம பலம் பெற்று உண்மை, நேர்மை, நீதி என்பவற்றை உலகில் செயற்படுத்தத் தூய ஆவியார் தமது கொடைகளால் திருச்சபையைப் பூரணப்படுத்துகிறார்.

உலகத் திருச்சபையின் பண்புகள் யாவற்றையும் ஒவ்வொரு ஒன்றியத்திலும் காணலாம்

1.4 பங்கு ஒன்றியத்தின் தூதுரைப்பணி
1. கெரிக்மா
2. லெயிடுர்ஜியா
3. தியகோணியா
4. அகாபே
5. கொம்முனியோ

1.5. ஞாயிறு திருப்பலியில் பங்குகொள்வதாலும், தனித்தும் பொதுவாயும் செப வழிபாடுகளில் ஈடுபடுவதனாலும் தூதுரைப்பணி செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிப் பூசுதலால் திடப்படுத்தப்பட்டுள்ள நாம் பங்கில் மற்றவரோடு சேர்ந்து பல வழிகளில் செயற் படவேண்டும்.

1.6 ஒன்றியம்: பங்கு ஒன்றியம், மறைக்கோட்டம், மறைமாவட்டம் போன்றவை பற்றிய அறிவை நாம் கொண்டிருக்க வேண்டும்.

## 2ம் பாடம்
## நாட்டில் மனிதத் தொடர்புகள்

தொடக்கநூல் 1:10 இந்த உலகு இறைவனுடைய ஆசிர்வாதத்தைப் பெற்று அவர் விருப்பப்படி உருவானது. இதில் எமது தாய் நாடாம் இலங்கையும் ஒரு நாடாகவுள்ளது.

எமது நாடு இயற்கை வளம் கொண்டது. அழகு மிக்கது. பழைமை மிக்க கலாச்சாரத்தைக் கொண்டது. நம் முன்னோர் நல்லவர்களாக வாழ்ந்து ள்ளனர். நாட்டின் தர்மநெறி தூய ஆவியாரின் வழி நடத்துதலில் பாதுகாக்கப்பட்டு வந்தது. எம் நாட்டைப்பற்றி நாம் உலகுக்கு எடுத்துரைக்க வேண்டும் நாட்டின் முன்னேற்றம் மக்கள் கைகளிலேயே உள்ளது. வேற்று மையில் ஒற்றுமை கண்டு வாழ்கிறது எமது நாடு

### இயேசுவின் முன் மாதிரிகை

எமது நாட்டில் நல்லதொரு மனிதத் தொடர்பை ஏற்படுத்த இயேசுவின் முன்மாதிரிகையை நாம் பின்பற்ற வேண்டும். இயேசு பலஸ்தினாவில் வாழ்ந்தபோது சமுதாயத்திற்குப் பொருத்தப்பாடுடைய வராக வாழ்ந்தார். யூதப்பழக்க வழக்கங்களை மதித்தார். எவ்வேளையிலும் இறைதந்தைக்குப் பணிந்து நடந்தார்.

நாம் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றி அவர் பிள்ளைகளாக வேண்டும் (லூக்கா 8/21) எம்மோடு வாழும் ஏனையோரோடு நல்லுறவுகளை வளர்க்க வேண்டும். இவ்வகையில் (மத்தேயு 13:29 -30) பலரோடு மோத வேண்டியிருக்கும் ஆயினும் நாம் அனைவ ரோடும் சமாதானமாகவும், அன்பாகவும் வாழ வேண்டும். நமது நல்ல செயல்களே நமக்கு நற்பயன் தரும்.

நாம் பிறரைத் தீர்ப்பிடமுடியாது. அனுதாபம் காட்டுவது மனிதத்துவத்தின் மேலான பண்பாகும். லூக்கா 16:19 -21 இல் கூறப்படுவதை நாம் சிந்திக்க வேண்டும். பணத்திற்கு அடிமையானால் மனிதத் தொடர்புகள் வீழ்ச்சியடைந்து விடும். லூக்கா 18: 15 -21 இல் காண்க, பணம் எமக்குத் தேவைதான் ஆனால், அளவுக்கு மீறிய ஆசை கொள்ளக் கூடாது.

❖ மன்னிப்பதற்கும், மன்னிப்புப் பெறுவதற்கும் முயற்சித்தல்: (மத்தேயு 5: 44) நாம் மனித பலவீனங்காரணமாகப் பலருடன் மோதுவதுண்டு. உறவு முறியும் நிலையுண்டு. நாம் மனித பலவீனங்களை ஏற்று, மன்னிப்புக்கொடுத்து, மன்னிப்புப் பெற்று வாழவேண்டும்.

❖ சாதி, மத பேதமின்றி மனிதத்துவத்தைப் பாது காப்போம்: நல்ல கிறிஸ்தவனாக இருக்க, நாம் நல்ல மனிதனாக இருக்கவேண்டும். கிறிஸ்தவ மதிப்பீடுகளின் அடிப்படைத் தத்துவம் மனித மதிப்பீடுகளாகும். நல்ல சமாரியனின் உவமையை நாம் மனிதில் கொள்ள வேண்டும். இல்லை யென்றால் அழிவே ஏற்படும்.

திருப்பலி ஒப்புக்கொடுக்கும் கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்தவ மதிப்பீடுகளுக்குச் சாட்சிகளாகிறோம். நல்ல தொடர்புகள் மூலம் பல இன மக்கள் மத்தியில் ஒற்று மையையும், சமாதானத்தையும், நல்லுறவையும் வளர்க்க நாம் அர்ப்பணமாக வேண்டும். அதுவே இறை சித்தம். இறையரசின் மதிப்பீடுகளே எமக்கு முக்கியம்.

## 3ம் பாடம்
## உலகில் மனிதத் தொடர்புகள்

நாம் வாழும் உலகம் இன்று உலகளாவிய ஒரு கிராமமாக மாறிவருகிறது. உலகமானது, மிகவேக மாகப் பல மாற்றங்களைக் கண்டு வருகிறது. இறைவன் வழங்கிய அறிவைப் பயன்படுத்திப் பலவற்றைக் கண்டு பிடிக்க மனிதனால் இன்று முடிகிறது. கருத்துக்களைச் சரிவர வெளியிடவும் ஆற்றல் பெற்றுள்ளான். மக்கள் தொடர்புச் சாதனங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. உலகவரலாற்றை நாம் அவதானித்தால் மனித முன் னேற்றத்தையறிய முடியும்.

உலகில் எந்த இடத்தில் நன்மையான செயல் நடைபெறுகிதோ அங்கே இறைவன் உள்ளார் எனக் கூறலாம்.

**திருச்சபையின் இரண்டு வகையான பொறுப்புக்கள்**

1. திருச்சபையில் செயலாற்றும் கிறிஸ்தவரின் ஆன்மீக வாழ்வை உறுதிப்படுத்துதல்
   ❖ செபம், தியானம் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ திருவருட்சாதனமூலம்
- ❖ அப்பம் பிட்குதல் மூலம்
- ❖ மறைபோதனைமூலம்
- ❖ திருச்சபையை நோக்கி மக்களை வழிநடத்துதல் மூலம்

2. உலகில் பரந்துவாழும் விசுவாசிகளினுதவியுடன் உலகைத் தூய்மைப்படுத்துதல்.

**இறையரசைப் பரப்புவதிலீடுபடுதல்**


அபிவிருத்திக்குக் காரண கர்த்தாவும், அதன் நோக்கமாகவுமிருப்பவன் மனிதனே.மனிதத்துவத்தைக் கட்டியெழுப்புவதே திருச்சபையின் நோக்கம். இதை நிறைவேற்ற ஒருமைப்பாடு முக்கியம்.

❖ ஆசியாவுக்கான இறைவார்த்தை எனும் நூல் கூறும் கருத்துக்கள்.

1. பரிசுத்த திருச்சபை உலகமக்களனைவருடனும் தொடர்பையேற்படுத்திக் கொள்ள வேண்டும்.
2. தீமைகள் நிகழுமிடங்களில் அச்சமின்றி இறையரசின் மதிப்பீடுகளைப் பறைசாற்ற வேண்டும்.
3. சமாதானத்தையும், நல்லுறவையும் ஏற்படுத்த வேண்டும்.
4. பிழைகள் செய்யும் சமுதாயத்துக்கு நல்லுரை வழங்க வேண்டும்.
5. உலகின் மிகவேகமான முன்னேற்றத்தால் பல பண்புகள் சமுதாயத்திலிருந்து விடுபட்டும் போகலாம்
6. திருச்சபை இன்றுகாணும் நவீன தொழில்நுட்பங்கள் பற்றிய அறிவை மக்களுக்குக் கொடுக்கவேண்டும்.
7. சர்வதேச உலகில் கௌரவமான ஒரு நிலையைப் பெற எல்லா நாட்டு மக்களுக்கும் வழிகாட்ட வேண்டும்.

பலூன் பறப்பது அதன் வர்ணத்தாலல்ல என்பது போல மனிதன் உயரத்தேவையானது மனிதத்துவமே இதையே நாம் பயன்படுத்த வேண்டும். ஒருவனது ஆன்ம பலமே அவனை உயர்த்தும் என்ற உண்மையை விளங்கி நல்வாழ்வு வாழ முற்படுவோம்.

# விண்ணக வாழ்வில் 1ம் ஆண்டு நினைவஞ்சலி



**அருட்சகோதரன். எட்மன் சாள்ஸ் திசாநாயக்க**

**தாயின் மடியில் : 24.02.1960**
**துறவற நிலையில் : 04.10.1984**
**இறை அர்ப்பணிப்பில் : 04.10.1992**
**நிலை வாழ்வில் : 12.04.2001**

ஏனெனில் நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே (பிலி 1.26)

இரக்கமுள்ள தந்தையே இறைவா! எங்கள் மேலும் இறந்துபோன என் அன்பான சகோதரன் மீதும் மனமிரங்கியருளும். எங்கள் வேதனையையும் துயரத்தையும் நீக்கியருளும் நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பாடுகள், மரணம் ஊடாக உயிர்த்தெழுதலுக்கு அழைத்துச் செல்லும். உம்முடைய நன்மைத் தனத்திலே நம்பிக்கை கொள்ள எங்களுக்குக் கிருபை செய்தருளும்.

ஆமென்

**௧௨. ௦௪. ௨௦௦௨ அன்று திருப்பலிகள்**

காலை 6.30 மணிக்கு புனித பிரான்சிஸ் அசிசியார் சிற்றாலயம், மாத்தளை

காலை 600 மணிக்கு புனித காணிக்கை மாதா ஆலயம் தாண்டவென்வெளி, மட்டக்களப்பு

காலை 6 00 மணிக்கு புனித குவாடலுப்பே அன்னை திருத்தலம் திருகோணமலை.

*என்றும் அன்புடன் தாய்*
*சகோதர சகோதரிகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தற்காலிக நிறுத்தம்



தொண்டன் இதழில் தொடர்ந்து வெளியாகிக் கொண்டிருக்கும் 'கனவிடை தோய்ந்து' தொடர்கதை தவிர்க்க முடியாத காரணங்களால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.

- ஆசிரியர்

## கொழும்பு திருமறைக் கலாமன்றத்தினரின் தவக்கால ஆற்றுகை

கொழும்பு திருமறைக் கலாமன்றத்தினர், மட்டக்களப்புக் கிளையின் அனுசரணையுடன் 'அமைதிக்களம்' என்னும் தவக்கால ஆற்றுகை ஒன்றை கடந்த மார்ச் மாதம் 23ம் திகதி சனிக்கிழமை நடாத்தினர். மட்/ இருதயபுரம் திறந்த வெளிபரங்கில் இடம்பெற்ற இவ்வாற்றுகை வித்தியாசமாகவும், நன்றாகவும் இருந்ததாகப் பார்த்தவர்கள் பேசிக் கொண்டனர். போதிய விளம்பரம் செய்யப்படாமையால் பலபேர் இந்நிகழ்வு பற்றி அறியவில்லை என்று தெரிய வந்தது. மேடை அமைப்பு, காட்சி அமைப்பு, நடிப்பு போன்றவற்றில் திருமறைக் கலா மன்றத்தினரின் முதிர்ச்சியும் அனுபவமும் தெரிவதாகச் சிலர் கருத்துத் தெரிவித்தனர். திருமறைக்கலா மன்றம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமாக பல கிளைகளைக் கொண்டு" கலை வழி இறைபணி புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## சீனாவில் கத்தோலிக்கர் கைது

சீனாவில் திருச்சபைக்கு விசுவாசமாக இருக்கும் கத்தோலிக்கர்கள் அரசு அங்கீகாரம் பெற்ற தேசிய கறிஸ்தவ சபையில் இணைய மறுத்ததைத் தொடர்ந்து அரசால் கைது செய்யப்பட்டு வருகின்றனர். சீன அரசால் தொடர்ந்து கைது செய்யப்பட்டுவரும் கத்தோலிக்கர்கள் காணாமல் போவதும் வீட்டுக் காவலில் வைக்கப்படுவதும் தொடர்வதாக உரைக்கும் சிடெஸ் அமைப்பு இத்தவக் காலத்தில் இவர்களுக்கான சிறப்பு செபத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

## அமைதி ஒப்பந்தம்

மத மோதல்கள் இடம் பெற்று வந்த இந்தோனேசியாவில் முலுகஸ் பகுதியில் கறீஸ்தவம் மற்றும் இஸ்லாமியரிடையே அமைதி ஒப்பந்தம் உருவாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் ஏறத்தாள 13,500 பேர் மத மோதல்களுக்குப் பலியாகி உள்ள சூழலில் கடந்த பெப்ரவரி மாதம் 11ம் திகதி அன்று இரு மதத்தவருக்கும் இடையே தொடங்கிய பேச்சுவார்த்தைகளின் இறுதியாக இவ்வொப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இது மதப்பிரச்சினையாக மட்டும் அல்ல தேசீய பிரச்சினையாகவும் மாறி உள்ளதை முன்னிட்டு இந்தோனேசிய அரசின் முயற்சியுடன் இவ்வமைதிப் பேச்சு வார்த்தைகள் தொடங்கப்பட்டன. கிறிஸ்தவக் கிராமங்கள் தாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்ட சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாதென்ற நம்பிக்கையை இவ்வமைதி ஒப்பந்தம் தருவதாக மதத் தலைவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நிவாரணம்"

## நாடக நூல் வெளியீடு

தமிழ் இலக்கிய வெளியீடுகள் மத்தியில் நாடக நூல்களின் வெளியீடு மிகவும் மந்தமாகவே இருப்பதுண்டு. நாடகங்கள் படித்துச் சுவைப்ப தற்கும், பார்த்து இரசிப்பதற்குமானவை என இரு வேறு பட்டவையாகும். ஆனால் மேடையேறிய நாடகங்கள் நூலுருப் பெற்று வருவதும் வழக்கமாக உள்ளது.

கடந்த மாதம் 14ம் திகதி (14.03.2002) மட்/ ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்ற 'நிவாரணம்' நாடக நூல் வெளியீடும் இவ்வகைப்பட்டதுதான் ஆறு நாடகங்களைக் கொண்ட இந்நூலின் ஆசிரியர் தேவ (நாயகம்) அலோசியஸ் ஆசிரியர், நடிகர், நாடக எழுத்தாளர், நெறியாளர் என்று பல ஆற்றல்கள் கைவரப் பெற்றவர் என்பதை மேடைகளிலும், நாடகப் போட்டிகளிலும் நிரூபித்துள்ளார்கள். இந்நூலிலுள்ள ஆறு நாடகங்களில் நான்கு நாடகங்கள் உள்ளூர் மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் பரிசுகள் பெற்றவை. நூலின் தலைப்பாக உள்ள **'நிவாரணம்'** என்னும் நாடகம் ஏழு தேசிய விருதுகளைப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து தேவ. அலோசியசை அவரது ஆற்றல்களை நாம் சரியாக இனங் காணலாம்.




சமூகப் பிரச்சனைகளை மிக யதர்த்தமாக தனது நாடகங்களிலே கையாண்டுவரும் தேவ. அலோசியஸ் மேடை, வானொலி போன்றவற்றில் தமது பங்களிப்புகளை வழங்கிவருகிறர். எனினும் மேடையில் இவரது நாடக ஆற்றல்கள் அதிகமாகவே அறியப்பட்டுள்ளன.

பேராசிரியர் வி. மௌனகுரு தமது அணிந்துரையில் குறிப்பிட்டிருப்பது போல் பணிவும், உழைப்பும், கற்கும் ஆர்வமும் உடைய இளைஞர் அலோசியஸ். அவரது நாடக எழுத்தும், நடிப்பும் வளர வேண்டிய எல்லை நீண்டிருக்கிறது. ஆற்றலும், ஆர்வமும் உள்ள அவர் அந்த இலக்கை எய்துவார் என்பது உறுதி. இது போன்ற நாடக நூல்களை நாம் வரவேற்று, உற்சாகப்படுத்தி, பயன்படுத்துவதன் மூலம் ஆற்றலும் ஆர்வமும் உள்ள இளம் கலைஞர்களை வளரவைக்கலாம்.

விலை - 125/-

தொடர்புகளுக்கு :-

'பைன்ஆர்ட்ஸ் கலைக்கழகம்'
72, கதிர்காமர் வீதி,
மட்டிக்களி,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞனே ஒரு கணம்

தி. நிரோஸ்ஷன்
உவர்மலை பங்கு

உனக்காக நான் மரித்தேனே எனக்காக நீ என்ன செய்தாய் என்று நம் ஒவ்வொருவரையும் உயிர்த்த ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து வினவுகிறார். படகில் ஓட்டை இருக்கின்றதா என்று படகை செலுத்து முன் பார்ப்பதுதான் காலப் பொருத்தம். அதுபோல் எமது வாழ்வையும் ஒரு கணம் புடமிட்டு பார்ப்பது நம் வழியை சீர்படுத்த, இயேசுவின் பாதையில் நடைபயில ஏதுவாக அமையும். எதிர்காலம் உங்களுக்குரியதாய் இருப்பது போல் நீங்களும் எதிர் காலத்திற்குரியவர்களாய் இருக்கி றீர்கள். நம்பிக்கையானது எப்பொழுதும் எதிர்காலத்தோடு இணைந்ததாகும். எனவே எங்களுடைய வாழ்க்கை என்பது எதிர்காலத்தை நோக்கிய பயணம், முடிவில்லா வாழ்வை நோக்கிய பயணம்.

ஒவ்வொரு மனிதனது வாழ்விலும் முக்கிய இடம் வகிக்கும் இளம் பருவத்திற்கு திருச்சபையானது பல்வேறு வகையிலே முக்கியத்துவத்தை அளிக்கிறது. எது எவ்வகையாயினும் இளம் பருவத்தினராகிய நாங்கள் தான் எம் இளமைக்கு உருக்கொடுப்பவர்கள், தேசங்களினதும், சமூகங்களினதும், ஒவ்வொரு குடும்பத் தினதும், முழு மனித இனத்தினதும், திருச்சபையினதும் இளம் பருவத்தினராக விளங்கும் நாங்கள், அந்த இளமையானது எமது ஒவ்வொருவரினதும் உரிமைச் சொத்தாகும் என்பதை உணரவேண்டும். அது மனித குலத்திற்கே உரிய ஒரு சொத்து எனலாம். இன்று இளைஞர்களுக்கு ஆன்மீகம் குறைந்து கொண்டே செல்கின்றது. இதை வளர்க்க வேண்டிய கடமைப்பாடு எம் ஒவ்வொருவருக்கும், எம் திருச்சபைக்கும் உரியது.

"நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு யாராவது விளக்கம் கேட்டால் தக்க விடையளிக்கத் தயாராய் இருங்கள்" (1பேதுரு 3:15) இன்று எம் மத்தியிலே பல சபைகள் பிறப்பெடுக்கின்றன. அக் குறைப்பிரசவக் காரர்களால் எமக்குப் பல சோதனைகள், நாம் கொண்ட நம்பிக்கைக்கு எதிராக, அவைகளை உடைத் தெறிய, வெற்றி கொள்ள எம்மவர்க்கு மறை ஞானமும், நல் விசுவாசமும், இறை நம்பிக்கையும் அவசியமாகின்றது. இவை இன்று சற்று வளர்ச்சிய டைந்துள்ளதாகவே தோன்றுகிறது.

வன்செயல், வஞ்சனை, பொறாமை பழிக்குப் பழி, கோபம் என்று எம் தீச் செயல்களை அடுக்கிக் கொண்டே போகலாம். எமக்கு தெரிகின்றது, இவைய னைத்தும் பிழையென்று. ஆனால் நாம் செய்கின்றோம். ஏன் என்று எப்போதாவது சிந்தித்ததுண்டா? எம்மால் இவற்றைக் கட்டுப்படுத்த முடிகின்றதா? மீண்டும் மீண்டும் பாவத்தில் விழுகின்றோம். கிறீஸ்து எங்களுக்காக துன்புற்று முன்மாதிரிகை காட்டியுள்ளார். "வன்செயல் எதுவும் அவர் செய்ததில்லை.

வஞ்சனை எதுவும் அவர் வாயில் இருந்த தில்லை

பழிக்கப்பட்ட போது பதிலுக்கு பழிக்கவில்லை துன்புறுத்தப்பட்ட போது அச்சுறுத்தவில்லை" (1பேதுரு 2: 22-23)

ஆனால் இறுதியில் வென்றது யார்? கிறீஸ்து தானே. அந்த வெற்றி வீரனின் முன்மாதிரிகையில் செல்ல திருச்சபை எம்மை அழைக்கின்றது.

நீங்கள் எந்த வேலையைச் செய்தாலும் மனிதருக்காகச் செய்வது போல செய்யாமல் ஆண்ட வருக்குச் செய்வது போல நெஞ்சார செய்யுங்கள். அதற்குக் கைமாறாக ஆண்டவர் உங்களை தம் வாரிசு களாக்குவார் என்பது உறுதி. எனவே இன்றே எம் சிந்தனையில் இதை இருத்தி செயல்படுத்துவோம். வேடிக்கை பார்க்க ஆரம்பித்தால் எல்லாம் பிரமிப்பு தான், முயற்சி செய்தால் எதுவும் சாதாரணம் தான்.

## பணிவு

பணிவதால் ஒன்றும் நமக்கு இழிவு வந்துவிடாது அது நமது பெருமையையே புலப்படுத்தும் துலாக் கோலில் தாழ்ந்த தட்டுக்குத்தானே பெருமை! காய்த்துப் பழுத்துப் பயனடைய மரக்கிளை தாழ்ந்து இருக்கும். காய் கனி இல்லாத கிளைகள் உயர்ந்து நிற்கும். எதற்குப் பெருமை தாழ்ந்த கிளைக்கா? உயர்ந்த கிளைக்கா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப்போட்டி !

**பிள்ளைகளுக்கு மட்டும்**

**முடிவுத்திகதி 30. 04.2002**

**விவிலியம் கற்போம் - 16**

## யோசேப்பு தம்மைத் தெரியப்படுத்தல்

(தொடக்கநூல் 44: 6-34, 45: 1-3)

**பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புக**

யோசேப்பின் கட்டளைப்படி மேற்பார்வையாளன் துரத்திச் சென்று யாக்கோப்பின் புதல்வர்களை வழிமறித்துச் சோதித்தபோது, காணாமற் போன வெள்ளிக்கோப்பை ........................ பையிற் காணப்பட்டது. அவர்கள் யோசேப்பு முன்பாக அழைத்துவரப்பட்டனர். அப்போது யோசேப்பு: "நீங்கள் ................. இப்படிச் செய்துவிட்டீர்கள்? ..................... என்னைப்போன்று ஒருவருமிலர் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்று வினவினார். அதற்கு அவர்கள் தரையில் வீழ்ந்து வணங்கினார்கள். அப்போது யூதா, "என் தலைவராகிய தங்களிடம் நாங்கள் என்ன சொல்வோம்? என்ன பேசுவோம்? எங்கள்.................. எப்படி நாங்கள் எண்பிக்க முடியும்? இதோ, எவனிடம்..................... கண்டுபிடிக்கப் பட்டதோ அவனும், நாங்களும் தங்களுக்கு அடிமையாவோம்" என்று சொன்னார். அதற்கு யோசேப்பு "அத்தகைய ........................ செயலை நான் செய்ய மாட்டேன். கோப்பை..................... அகப்பட்டதோ அவன் மட்டும் அடிமையாயிருக்கட்டும்" என்றார். அதைக்கேட்ட அவர்கள் கலங்கி, நடந்தவை அனைத்தையும் எடுத்துரைத்து, பென்யமினோடு போகாவிடில் தந்தை இறந்து போவார் என அழுது, புலம்பினார்கள். அதைக்கேட்டு மனங்கலங்கிய யோசேப்பு ......................... முன்னிலையில் தம்மை அடக்கிக் கொள்ள முடியாமல், "எல்லோரும் ......................... வெளியே போங்கள்" என்று பணியாளர்களை அனுப்பிவிட்டு சகோதரர்களுக்குத் தம்மைத் தெரியப்படுத்தினார். "நான் தான் ...................... என் தந்தை இன்னும் உயிரோடு இருக்கிறாரா" என்று கேட்டார். ஆனால் அவரைப் பார்த்து அவர் சகோதரர்கள் திகிலடைந்ததால், அவர்களால் பதில் பேச முடியவில்லை.

***<u>விடைகள்</u>***

**எவனிடம், யோசேப்பு, முறையற்ற, பென்யமின், பணியாளர்கள், என்னைவிட்டு, குறிபார்ப்பதில், கோப்பை, மாசின்மையை, என்ன.**

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................

(விடைகள் வினாப்படிவத்திலேயே எழுதி அனுப்பப்பட வேண்டும். தனியாக எழுதப்படும் விடைகள் போட்டிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு மட்டும்

முடிவுத்திகதி 30. 04. 2002

# பரிசுப்போட்டி!

## அறிவை வளர்ப்போம் – 16

(பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து அடிக்கோடிடுக)

1) "மதங்க சூளாமணி" என்னும் நூலை இயற்றியவர்

(சுவாமி விபுலானந்தர், ஆறுமுக நாவலர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை)

2) அமெரிக்க நாட்டின் தற்போதைய ஜனாதிபதி.

(பில்கிளின்டன், ஜோர்ஜ் W. புஷ், ஜோர்ஜ்வாசிங்ரன்)

3) ஆறுவது ................................

(வெந்நீர், கோபம், சினம்)

4) 'நடிகர் திலகம்' என்று புகழப்பட்ட தென்னிந்திய நடிகர்

(கமலஹாசன், ரஜனிகாந், சிவாஜிகணேசன்)

5) இந்திய கிரிக்கட் அணியில் ஓட்டங்களைக் குவிப்பவர்

(கங்குலி, சச்சின், டிராவிட்)

6) இந்தியாவுக்குப் பிரதமர்போல் இலங்கைக்கு

(பிரதமர், ஜனாதிபதி, சபாநாயகர்)

அனுப்ப வேண்டியமுகவரி

விவிலியம் கற்போம் - 16 அறிவை வளர்ப்போம் - 16
தொண்டன்
த.பெ.எண் 44
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியம் கற்போம் 14 விடைகள்

1) உணவுப் பொருட்கள் 2) கானான் 3) இளைஞனை 4) என் முகத்தில் 5) சகோதரன் 6)துன்பம் 7) பஞ்சம் 8) எகிப்திலிருந்து 9) குழந்தைகளும் 10) பெண்ணியமின்னையும்

---

# அறிவை வளர்ப்போம் 14 விடைகள்

1) சிலப்பதிகாரம் 2) இலங்கை 3) முத்துசுவாமி தீட்சிதர்
4) அர்ஜுனரணதுங்க 5) தலை 6) பாரதிதாசன்

**இருபோட்டிகளுக்கும் சரியான விடைகளை எழுதி**

**100/- பரிசு பெறுவோர்**

1) றெஜினா கிளேறியன்ஸ்
இசை நடனக் கல்லூரி வீதி
நொச்சிமுனை, மட்டக்களப்பு

2) அ. சியாமளா
18/1, பாக்கியம் ஒழுங்கை
பெரிய உப்போடை, மட்டக்களப்பு

**ஒரு போட்டிக்கு மட்டும் சரியான விடை எழுதி**

**50/- பரிசு பெறுவோர்**

1) ந. துஷாந்தினி
43,காளிகோயில் வீதி,
மட்டக்களப்பு

2) குயின்சியா தொக்கஸ்
22. 1ம் குறுக்கு ஞானசூரியம்
சதுக்கம்,மட்டக்களப்பு

**பாராட்டுப் பெறுவோர்**

ம. துஷாந்தினி
இல, 3. ஆறாம் குறுக்கு, மாமாங்கம்,
மட்டக்களப்பு.

K. ஆனந்தகுமார் K. முதலாம் பிரிவு,
ஸ்பிரிங்வெளி

**பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.


# Radio Veritas Asia

வேரித்தாஸ் வானொலியின் தமிழ் நிகழ்ச்சிகளை, தினமும் இலங்கை நேரம் காலை 6.30 மணி முதல் 7.00 மணிவரை சிற்றலை இரண்டு 25.43 மீட்டரில் 11795 அலைவரிசை புள்ளியிலும், மாலை 8.00 மணி முதல் 8.30 மணிவரை சிற்றலை இரண்டு 31.51 மீட்டரில் 9520 அலைவரிசைப் புள்ளியிலும் கேட்டு பயன்பெறுங்கள்.

## வேரித்தாஸ் தமிழ்ப்பணியின் நிகழ்ச்சிகள்:

### காலை

| | |
|---|---|
| திங்கள்: | சங்கே முழங்கு, உலகச் செய்திகள் |
| செவ்வாய்: | இலக்கிய விருந்து, உலகச் செய்திகள் |
| புதன்: | எங்கே போகிறோம், உலகச் செய்திகள |
| வியாழன்: | சாதனைச் சரித்திரங்கள், உலகச் செய்திகள் |
| வெள்ளி: | அவனியில் பவனி, தாயகச் செய்திகள், உலகச் செய்திகள் |
| சனி: | காட்சியும் கருத்தும், உலகச் செய்திகள் |
| ஞாயிறு: | அருள் அலைகள், தாயகச் செய்திகள |

### மாலை

| | |
|---|---|
| திங்கள்: | ஒளியைத் தேடி, உலகச் செய்திகள |
| செவ்வாய்: | இதயம் இணைகிறது, செபம், உலகச் செய்திகள் |
| புதன்: | வந்ததும் தந்ததும், பிறந்தநாள் வாழ்த்து, கேள்வி பதில், உலகச்செய்திகள |
| வியாழன்: | நலம் காப்போம், அறிவியல் மணம், உலகச் செய்திகள |
| வெள்ளி: | அவனியில் பவனி, உறவுப்பாலம், உலகச் செய்திகள் |
| சனி: | வெற்றிமுரசு, உண்மையின் எண்ணங்கள |
| ஞாயிறு: | இதயங்களுக்காக இசைத்தேன், உலகச் செய்திகள். |

உங்கள் ஆக்கங்களையும் திறனாய்வுகளையும், விமர்சனங்களையும் பின்வரும் முகவரிகளில் ஏதேனும் ஒன்றிற்கு எழுதுங்கள்.

றேடியோ வேரித்தாஸ் தமிழ்ப் பணி
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் – 44
மட்டக்களப்பு.

**Radio Veritas Asia**
Tamil Service
P. O. Box - 2642
Fairview, Quezon City
Philippines 1166


St. Ignatius Type Setting - 28, Sinnalebbe Street, Batticaloa.
Printing & Cover Designation = St. Joseph's Catholic Press, Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org